இதழ் –18

01.02.2021

# துமி

## பல்சுவை மின்னிதழ்



அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி

அரசு

ஒட்டகப்பறவை தெரியுமா

பெருவெள்ளத்திற்கான பயணம்

# மீண்டும் வர வேண்டும் மல்லிகை!!!









முற்றத்து மல்லிகைகள் மணப்பதில்லை என்பதை மல்லிகையைக்கொண்டே மறுதலித்த ஒரு சமூகப்போராட்ட வீரன் தான் கடந்த 28.01.2021 இல் அமரத்துவமடைந்த டொமினிக் ஜீவா அவர்கள். ஆம்! யாழ்ப்பாணத்தில் ஊறிப்போயிருந்த சாதீயத்தீயை அணைப்பதற்காக இறுதிவரை போராடிக்கொண்டே இருந்த ஒரு பெருமகனை ஈழத்து எழுத்துலகம் இழந்து நிற்கிறது.

குலம் வழி தொழிலென்ற யாழ்ப்பாணத்து எழுதப்படாத சட்டங்களாலும், தந்தையை இழந்த குடும்பத்து வறுமையை போக்கவும் சவரத்தொழிலை சிறுவயதிலேயே ஜோசப் கையிலெடுக்க வேண்டியிருந்தது. எல்லோருக்கும் அது முகத்தை அழகாக்கும் சவரசாலை. ஆனால் ஜோசப்பிற்கோ அது அகத்தையும் எழுத்தையும் அழகாக்கும் சர்வகலாசாலை. கண்ணெதிரே கண்ட சமூக அவலங்கள் மீதான அவரது கோவம் அக்னிப்பிழம்பாக எழுத்துக்களில் வெடித்தது. அவரது எழுத்துக்களுக்கு கடிவாளம் போடத்தொடங்கினர் பலர். எண்ணியவற்றை அச்சேற்ற அவருக்கென பத்திரிக்கை தேவைப்பட்டது. உதயமானது மல்லிகை. சவர சாலையின் ஜோசப், மல்லிகையின் டொமினிக் ஜீவாவாக அறியப்பட்டார்.

வர்ணனைகள் எழுதினால் வரவேற்கப்படுவோம். வலிகளை எழுதினால் புறக்கணிக்கப்படுவோம்.



பாரதி முதல் டொமினிக் ஜீவா வரை இருந்த காலத்தில் கொண்டாடப்படாமைக்கு இதுவே காரணம். தனி மனித முயற்சியால் 47 ஆண்டுகளாக மல்லிகையை வெளியிட்டு 401 இதழ்களை பிரசுரித்த அந்த ஆளுமை பத்திரிகையாசிரியராக சந்தித்த அவமானங்கள் பல. அனைத்தையும் வெளிப்படையாக எழுத்துக்கள் மூலம் பகிரங்கப்படுத்தி சமூகத்தின் கோர முகத்தை சமூகத்திற்கே காட்டினார்.



தள்ளாத வயதிலும் 47 ஆண்டுகளாக பத்திரிகை நடாத்தியவர் 50 எனும் மைல்கல்லை அடையாமல் விட்ட போது எவ்வளவு மனம் நொந்திருப்பார். ஒரு இதழாசிரியனுக்கு அவனது ஒவ்வொரு இதழின் வெளியீடும் ஒவ்வொரு பிரசவம் போன்றது. 401 பிரசவங்களை சந்தித்தவர் மூச்சைப்பிடித்து இன்னும் மூன்று வருடங்கள் சாதித்திருக்க முடியாதா?

இந்த சமூகம் டொமினிக் ஜீவாவுக்கு செய்த கொடுமைகள் ஏராளம். அவர் இறந்து விட்ட இந்த நேரத்தில் அவரை போற்றி சமரசம் செய்து கொள்ளப் பார்க்கிறது. அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்றால் இந்த சமூகத்தில் இருந்து சாதீயத்தை தூக்கி எறிவோம். அதற்கு முதல் மீள மல்லிகையை பிரசுரிப்போம்.

இணையாசிரியர்கள்
ஜ.வி. மகாசேனன்
ஜீவா. ஷஜீவன்
இ. வினோஜன்

வடிவமைப்பாளர்
வி. ரிஷிகேசவன்
வ. குணநிதன்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

திருநாள்வாளர்
க. குகவர்மன்

thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

# இவ்விதழில் துமித்தலை...

04 அட்டைப்படம் சொல்லும் கதை
06 சித்திராங்கதா
09 வெப்பமடைகிறது பூமி
13 திரைத்தமிழ் - கொளஞ்சி
14 பார்வைகள் பலவிதம்
16 யாழ் வெள்ளம்
19 அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி
22 குறுக்கெழுத்துப் போட்டி
23 ஈழச் சூழலியல்
27 வழுக்கியாறு
30 ஒட்டகப்பறவை தெரியுமா?
32 சிங்ககிரித்தலைவன்
34 நமோ நமோ மாதா
36 அரசு
38 பல்மருத்துவம்
40 மெஸ்ஸி

துமி பல்சுவை மின்னிதழ்

# அட்டைப்படம் சொல்லும் கதை

**புகைப்படப்பிடிப்பாளர்:~ சோபன் ராஜ்**
**புகைப்படம் எடுக்கப்பட்ட இடம் :~ குளியாப்பிட்டி**
**கருப்பொருள்:~ பட்சிகளின் காதல் கதை**

அன்பெனும் பெருவெள்ளம் இழுக்குமேல்
அதனில் யாவர் பிழைத்திட வல்லர்
பூவுலகில் புள்ளியாய் தெரியினும்
புள்ளினமெனக்குள்ளும் புதைந்த
காதல்
கதை ஒன்று கேளீரோ!!!

காதலுற்று கனிந்தவன் நான்
காதலுற்றதால் கனிந்தவன் நான்
காதலுற்ற செய்தியினை
மாந்தருக்குரைப்பதால் ஆவதொன்றில்லை
என்றறிவேன்
ஆனாலும் என்போல் அபூர்வக் காதல்
கொண்டால்
தானாய் உரைத்தாலன்றி சேரும் வழி
வேறுளதோ!




ஆதலினாலே
மானக் குலைவும் வருத்தமும் நான் பாராமல்
உண்மை முழுதும் உரைத்திடுவேன்
கேட்பீரோ?
பட்சிக்கு இரங்கி பரிதாபங் கொண்டேனும்
என்னிச்சைக்கு கொஞ்சம்
செவி கொடுக்க மாட்டீரோ?

அறிவும் வடிவும் குறுகி அவனியிலே
சிறியதோர் புள்ளாய்ச் சிறியேன் பிறந்திடினும்
அந்தச் சோதித் திருவிழியில்
நெஞ்சைப் பறி கொடுத்த நாளையே தினம்
எண்ணிக் கலங்குகிறேன்..
ஒரு மானுடப் பித்தனாய் முனகுகிறேன்...

நெடுங்காதல் மீறேன்.. - என்றெனை
விட்டுச் சென்ற விந்தைச் சிறுபட்சியை
காண நான் வேண்டிக் கரை கடந்த
வேட்கையுடன் கோணமெலாஞ் சுற்றி
மரக் கொம்பையெல்லாம் நோக்கி வந்தேன்.

காதல் வழிதான் கரடுமுரடானதென்பர்.
அந்தக் களிப்பேருவகை மிகுந்த கணங்களை
நினைந்தேயிந்தத் துன்பக் கடலினை
நல்லுறுதி கொண்ட தோர்
நாவாய் போல் கடக்கிறேன்.

நாவும் மொழியும் நடுக்கமுறும்
வார்த்தகளைத்தான் இறுகப் பற்றி
நின்றுரைக்கிறேன்!
காதலை வேண்டியே தினம் கரைகின்றேன்!
இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கிறேன்!

இத்தனை கோலத்திலும் யான் வேட்கை
தீராமல்
பித்தம் பிடித்த பெரிய கொடுமையையும்
எண்ணியெண்ணிப் பார்த்தேன்
எதுவும் நடக்கவில்லை
கண்ணெதிரே தெரிவன யாவுமே
கொடுமையென்றானது.
கண்ணிரண்டும் மூடினேன்.
கடுந்துயிலில் ஆழ்ந்துவிட்டேன்.

கண்டதொரு காட்சி கனவு நனவென்றறியேன்
எங்கிருந்தோ வந்தது எந்தன் பாதி!

கண்ணும் முகமும் களியேறிக் குதிக்க
அன்பின் அம்பு நுனிகள் அகத்தே
அமிழ்ந்திருக்க
கண்ணெதிரே காதலுருவம் கோடி பல
கோடியாய்
ஒன்றேயதுவாய் உலகெலாந் தோற்றமுற
கண்ட என் கனவை நீவிர்
எண்ணித்தான் பாருங்கள்! - இல்லையெனில்
முன் அட்டையினை நோக்குங்கள்!

காதலாகிக் கசிந்து நான் கண்ட
கனவின் விம்பமது நீவிர் காண்பது!

சிந்தையில் இனித்த காட்சிதனை
செம்மொழியில் என்னுரைப்பேன் கண்திறந்து
காணுங்கள்!
காதலிலே திளைக்கும் காதலரே காணுங்கள்!
காதலினைத் தூற்றும் இதயத்தோரே
காணுங்கள்!
காதலினைப் போற்றும் கவிஞரெல்லாம்
காணுங்கள்!
மாதரெல்லாம் காணுங்கள்!
வல்ல விதியே நீயும் இதைக் காண்பாய்!!

நாளொன்று போவதற்கு நான் பட்ட
பாடனைத்தும்
ஆசைத் துணையே!
அரும்பொருளே! தெய்வதமே!
இன்றுனக்கு சொல்ல
என்னவெலாம் சேர்த்து வைத்தேன்!
பேச முடியாததாய் பெருங்காதல்
கொண்டுவிட்டேன்!

காதலில்லையானால் கணத்திலே சாதல்
என்றிருந்தேன்!
காதலினால் சாகும் கதியிலே என்னை
வைத்தாய்!
எப்பொழுதும் நின்னை இனிப்பிரிவதன்று
இப்பொழுதே நின்னை முத்தமிட்டுக்
களிப்புறுவேன்!

கலையாத கனவாய் என் முத்தம் ஆக
வேண்டும்!
பெருங்கருணை பேரிறையே!
இன்னுங் கொஞ்சம் இந்தக் கனவை நீட்ட
வேண்டும்!

எங்கிருந்தோ அசரீரி..
"என் இனியவனே..
இது கனவல்ல.. நனவு.."

அசரீரி அல்ல அது..
அருகிலிருந்த என் பாதி!

***கனவுகள் நடப்பதுண்டு!***
***கனவுகள் ஜெயிப்பதுண்டு!!!***

## ஜீவாவின் நினைவுகள்...



ஜீவா சில சமயங்களில் வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றும் முகத்துக்கு நேரே பேசும் இயல்புள்ளவர். யாழ்ப்பாணத்தில் பிரபலமாக இருந்த தம்பித்துரை அன் சன்ஸ் என்ற பத்திரிகை - புத்தகக்கடைக்கு மாதாந்தம் மல்லிகையில் பத்துப்பிரதிகளை வழங்குவார். அந்த கடை உரிமையாளர் அதனை பத்திரமாக பாதுகாத்து மேசையின் கீழே வைத்திருந்துவிட்டு, அடுத்த தடவை ஜீவா புதிய இதழின் பிரதிகளை கொடுக்கவரும்பொழுது, "எதுவும் விற்கவில்லை" என்று மேசையின் கிழே இருந்த பத்து பிரதிகளையும் எடுத்துக்கொடுப்பார். இந்த நாடகம் பல மாதங்களாக அரங்கேறியது. வழக்கம்போல் கடையில் தொங்கும் குமுதம், ஆனந்த விகடன், பொம்மை, பேசும் படம் இதழ்கள் விற்பனையாகிவிடும். ஒரு நாள் ஜீவாவின் தர்மாவேசம் விழித்துக் கொண்டது.

***'நாளைக்கு நீர் இறந்து போனால் உம்முடைய சாவீட்டுக்கு குமுதம், ஆனந்த விகடன், பொம்மை, பேசும் படம் ஆசிரியர்கள் வரமாட்டார்கள். யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்த ஜீவாதான் வருவான்.'*** எனச்சொன்னது அவரது தர்மாவேசக்குரல்.

## மிக்கபிள்ளை ஆராச்சி

சங்கிலியனிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தை ஆண்ட எதிர்மன்ன சிங்கன் காலத்தில் ஆளுமைமிக்க கடற்தளபதியாக திகழ்ந்தவர் பெரியபிள்ளை ஆராச்சி என்பவர். எதிர்மன்ன சிங்கனைத் தொடர்ந்து நாட்டினை ஆளப்போகும் ஆற்றல் மிகுந்த தலைவனாய் பெரியபிள்ளை ஆராச்சி நம்பப்பட்டார். பெரியபிள்ளை ஆராச்சியின் ஒரே புதல்வன் மிக்கபிள்ளை ஆராச்சியாவான். சங்கிலியன் அரசனானது தன் தந்தைக்கு இழைக்கப்பட்ட துரோகம் என அவன் உள்ளத்தில் மிகுந்திருந்த எண்ணம் அவனைப் போர்த்துக்கேயர் பால் கூட்டுச்சேர வைத்தது.

போர்த்துக்கேயர் கைவசமிருந்த மன்னார் பகுதிக்குச் சென்று அங்கிருந்த பாதிரியர்கள் மூலம் கிறித்தவ மதத்தினை தழுவிக்கொண்டு "டொம் லூயிஸ்" என்று தன் பெயரினையும் மாற்றிக்கொண்டான்.

அவன் மனதில் தேங்கியிருந்த விசமத்தை பறங்கியர் சாதகமாக்கிக் கொண்டனர். "தர்மபாலன்" என்ற பாலகனை அரசனாக்கி கோட்டை இராச்சியத்தை தம்வசமாக்கியது போல் டொம் லூயிஸ் என்கிற மிக்கபிள்ளையை வைத்து பெருஞ்சவாலாய் அமைந்திருந்த யாழ்ப்பாண இராச்சியத்தை சரித்துவிட திட்டம் தீட்டினார்கள்.

பெரிய பிள்ளை ஆராச்சியின் நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் பெரியபிள்ளை இறந்ததும் மிக்கபிள்ளையை பின்தொடர தொடங்கினர். அந்தவகையில் அதிகாரத்திலிருந்த முதலியார்கள் சிலரும் மிக்கபிள்ளையுடன் கூட்டுச்சேர்ந்திருந்தனர். வலுவான கூட்டுடனும், போர்த்துக்கேயரின் உந்துதலினாலும் இராச்சியத்தை எதிர்த்து கலவரங்களை தொடர்ந்து நிகழ்த்திக் கொண்டிருந்தான்.

இவன் விடயத்தில் அளவுக்கதிகமாக பொறுமை காத்துவிட்டதாக சங்கிலியகுமாரர் எண்ணும்படியாக இறுதியில் மாருதவல்லியைக் கடத்திச் செல்வதற்கு துணிந்துவிட்டான்.

வன்னிமன்னன் வன்னியத்தேவனின் ஒற்றனாயிருந்த உக்கிரசேனன் மூலம் மாருதவல்லிக்கு இரகசிய ஓலை ஒன்றை மிக்கபிள்ளை அனுப்பி வைத்திருந்தான்.



# சித்திராங்கதா

காவ்யமோகன் 18

அரசாங்க உத்தியோகத்தர் என்ற அதிகாரத்தை பயன்படுத்தி உக்கிரசேனன் நல்லூர்க் கோட்டைக்குள் நுழைந்து யாரும் அறியாவண்ணம் அந்த ஓலையை மாருதவல்லியிடம் சேர்ப்பித்தான்.

"ராணியார்க்கு வணக்கங்கள்! இராச்சியத்தின் மகாராணியாக ஆவதற்கு தாங்கள் கொண்டுள்ள ஆர்வம் நானறிவேன். தாங்கள் அறிந்திருக் வேண்டிய அவசியமான இரகசியமொன்றை தங்களிற்கு மட்டும் தெரியப்படுத்த விரும்புகிறேன். தஞ்சை வீரருக்கு வாள் வழங்கும் விழா நிகழப்போகும் நாளில் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயமுன்றலில் தாங்கள் அதனைத் தெரிந்து கொள்ளலாம்.

நன்றியுடன் மிக்கபிள்ளை ஆராச்சி"

என்று எழுதப்பட்டிருந்த ஓலையைப் படித்ததும் தனிமையில் அவ்வளவு தூரம் செல்வதிலுள்ள அச்சத்தைக் காட்டிலும் அந்த இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் மாருதவல்லியை அதிகம் உந்தியது.

அந்த ஆர்வமிகுதியாலே யாரும் அறிந்திராவண்ணம் அரண்மனையை விட்டு வெளியேறினாள். வழியில் எதிர்பாராதவிதமாக வருணகுலத்தானை காண நேர்கையில் கூட தான் போகும் காரியம் குறித்து எதுவும் கூறிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள்.

விளையாட்டுத்தனமாய் அவளிடம் குடிகொண்டிருந்த மகாராணி ஆசை அவளை நல்லூர்க்கோட்டையை விட்டு இத்தனை தூரம் பயணிக்க வைக்கும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.
ஆனால் மிக்கபிள்ளையோ அதனையே சாதகமாக்கி வஞ்சகத்திட்டம் ஒன்றை தீட்டியிருந்தான்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலை மாருதவல்லியின் பல்லக்கு அடைந்தபோது அங்கே மிக்கபிள்ளை அவளிற்காய்

காத்திருப்பதைக் கண்டாள்.

“வாருங்கள் மகாராணியாரே, தங்கள் தைரியத்தை எண்ணி நான் மெச்சுகிறேன்.”

“நீர் மெச்சுவதற்காக நான் புறப்பட்டு வரவில்லை. சொல்ல வேண்டியதை விரைவில் சொல்லிவிட்டால் நான் திரும்பி செல்வதற்கு உதவியாய் இருக்கும். என்னிடம் நேரம் அதிகமில்லை”

“நிச்சயம் மகாராணி, கூறாமலா விடுவேன்! கூறுவதற்காகத்தானே தங்களை அழைத்திருக்கிறேன்” என்று கூறி உதட்டினை ஓரமாக்கிச் சிரித்தான். அந்தச்சிரிப்பு மாருதவல்லிக்கு கோபத்தை உண்டாக்கியது. இருந்தும் மௌனமாகவே இருந்தாள்.


“மகாராணி, இந்த ஆலயத்தை பற்றி தாங்கள் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று கருதுகிறேன்”

“அறியாமல் இருக்க நானொன்றும் பாலகி இல்லை மிக்கபிள்ளை அவர்களே- எம் இராச்சியத்தின் முதல் வேந்தர் உக்கிரசிங்கர் தன் ஆசைநாயகி சோழ இளவரசி மாருதப்புறவீகவல்லிக்காக உருவாக்கியதே இவ்வாலயம். அந்த மகாராணியின் நாமத்தையே தந்தை எனக்கு சூட்டியிருக்கிறார். நான் அறியாமல் இருப்பேனா?”

“அற்புதம் தேவி, தாங்கள் எல்லாவற்றையும் தெளிவுறவே அறிந்து வைத்துள்ளீர்களே. ஆனால் உக்கிரசிங்க மகாராஜா சோழ இளவரசியை எங்ஙனம் மணந்து கொண்டார் என்று அறிவீர்களா?”

“எங்ஙனம்? ” என்றாள் மாருதவல்லி ஒரு குழப்பமான முகத்தோடு

“நகுலேச்சர யாத்திரை வந்த சோழ இளவரசியை வலிந்து இளவரசியாரின் விருப்பமில்லாமலே மணந்து ஈழமகாராணி மாருதப்புறவீகவல்லி ஆக்கினார். அதனை ஈடுசெய்யவே- மகாராணியை மகிழ்ச்சிப்படுத்தவே இந்தக் கோயிலை அமைத்துக் கொடுத்தார். அன்றி பக்தியாலோ , காதல் பாசத்தாலோ என்று அர்த்தமல்ல” என்றான் ஆணித்தரமான குரலோடு மிக்கபிள்ளை.



"ஓஓஓ .. தாங்கள் இப்போது புதிய மதத்தவராகையால் எதையும் பேசிவிடலாம் என்ற எண்ணமோ? ... சரி, அது எப்படி இருந்தாலும் இப்போது அதற்கென்ன? அதைச்சொல்லுங்கள் முதலில்" என்றாள் அவசரமாக

மீண்டும் அதே சிரிப்புடன் மிக்கபிள்ளை "தாங்களுக்கும் இந்தக்கதைக்கும் கூட சம்பந்தம் இருக்கிறதே மகாராணி"

"என்ன சம்பந்தம்?"

"தெரிந்தேதான் தங்களிற்கு தந்தை இந்த நாமம் சூட்டினாரோ அறியேன். ஆனால் தாங்களும் தங்கள் நாமங்கொண்ட மகாராணி போலொரு வாழ்வை பெறவேண்டிய சூழ்நிலையாகப் போகிறது என்றுதான் எனக்குத் தெரிகிறது"

"என்ன கூற வருகிறீர்கள் மிக்கபிள்ளை அவர்களே" என்று மாருதவல்லி பொறுமையிழந்தவளாக கேட்டபோது மிக்கபிள்ளையிடமிருந்து பதில் வரவில்லை. அதே உதட்டினை ஓரமாக்கிய சிரிப்பு.

தொடர்ந்து சிரித்தான். அவன் சிரிக்கின்ற பொழுதில் மறைந்திருந்த சிலர் வெளிப்பட்டு வந்தனர்.

"கோழைத்தனத்தின் உச்சம் இது மிக்கபிள்ளை அவர்களே"

"தனிமையில் வந்தது தங்கள் முட்டாள்தனமன்றோ மகா... ராணி"

என்று கூறி மீண்டும் சிரித்தான்.

"முட்டாள்தனம் தான். ஆனால் எதிரியானலும் ஈழத்து ஆண்மகன் நீர் என்று நம்பியதால் வந்தேன். சீ....."

என்று கூறி முடிப்பதற்குள் சுற்றி நின்றவர்கள் அவளை நெருங்க அவள் தன்நிலை தடுமாறி மயக்கமுற்று கீழே விழுந்தாள்.

விழித்துப்பார்க்கும் போது அவள் இருந்த இடம் அவளிற்குத் தெரியவில்லை. பொழுது புரியவில்லை. ஒளியின் அறிகுறியே அங்கிருக்கவில்லை. சுற்றியும் இருள்.

ஆனால் செவிகளில் மட்டும் எங்கோ அருகில் சிறு யுத்தம் ஒன்று நிகழ்கின்ற சத்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது.


**களமேகும்...**

# ஜீவாவின் நினைவுகள்...

சகோதர சிங்கள இலக்கியவாதிகளின் மீது நேசமுற்று பிரபல மூத்த சிங்கள இலக்கிய மேதை மார்ட்டின் விக்கிரம சிங்காவை கௌரவித்து மல்லிகை முகப்பில் அவரது படத்தை வெளியிட்டு சிறப்பிதழ் வெளியிட்டார்.

அதனைக்கண்டு பொறுக்கமுடியாத ஒரு அதிதீவிர தமிழ்க்கொழுந்து, யாழ். மத்திய கல்லூரிக்கு முன்னால் தமது பிரியத்துக்குரிய சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஜீவாவை வழிமறித்து - மார்ட்டின் விக்கிரமசிங்காவின் படத்துடன் வெளியான மல்லிகை இதழை வாங்கி அவர் முன்னாலேயே கிழித்து முகத்தில் எறிந்துவிட்டுச்சென்றது.

தொடக்க காலத்தில் மல்லிகையின் ஆண்டு மலர்கள் ஒவ்வொரு வருடமும் ஓகஸ்ட் மாதத்தில் வெளியாகும். பிற்காலத்தில் ஜனவரி மாதத்தில் வெளியானது.



இறுதியாக நான் பார்த்த மல்லிகை 46 ஆவது ஆண்டு மலரில் 2001 இல் பாராளுமன்றத்தில் அஸ்வர் எம்.பி., மல்லிகை பற்றி உரையாற்றியபொழுது ஜீவாவையும் அவரது தேசிய உடையையும் விதந்து போற்றியது பற்றிய தகவலை இரத்தினச்சுருக்கமாக வெளியிட்டு பாரளுமன்ற பதிவேட்டு திகதியையும் (Hansard-04-02-2001) குறிப்பிட்டிருந்தார். மல்லிகை இலக்கிய வாசகர்களின் மனதில் மட்டுமல்ல இலங்கைப்பாராளுமன்றத்திலும் ஒலித்திருக்கிறது என்ற பெருமிதம் அதில் தெரிந்தது.

-எழுத்தாளர் முருகபூபதி

அதிரன்

# வெப்பமடைகிறது பூமி

## இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுதல்



வெப்பநிலை அதிகரிப்பதன் காரணமாக வரட்சி. சூறாவளி, வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கை அனர்த்தங்களின் உருவாக்கம் மிக அதிகளவில் காணப்படும். கடந்த காலப்பகுதிகளில் அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஏற்பட்ட அதிகளவிலான சூறாவளிகளின் உருவாக்கத்தில் பூகோள வெப்பநிலை அதிகரிப்பும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. அத்துடன் நவம்பர் மாதங்களிலேயே ஏற்படுகின்ற சூறாவளி நிலைமை தற்போது மாற்றமடைந்து வருடத்தின் ஏனைய காலப்பகுதிகளிலும் ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மியன்மாரில் 2008 ஆம் ஆண்டு தாக்கிய நர்கீஸ் சூறாவளி மே மாதத்தில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் வரண்ட பிரதேசங்களில் திடீரென பெய்கின்ற மழைவீழ்ச்சியின் காணமாகவும், மலைப்பனி உருகி நதிகளுடன் கலப்பதாலும் அதிக பிரதேசங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் தோன்றியுள்ளது. அமெரிக்காவின் மியாமி, நியுயோர்க் மற்றும் ஓர்லியன்ஸ் முதலிய பகுதிகள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கும்.



## மனித உணர்வில் மாற்றம் ஏற்படல்

வெப்பநிலை அதிகரிப்பதனால் உடலியல் ரீதியாக அது பல்வேறு தாக்கங்களை மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்றது. இதனால் மன உணர்வுகளில் மாற்றம் ஏற்படுகின்றது. குறிப்பாக மனஅழுத்தம், கோபம் போன்ற குணங்கள் மேலோங்குவதற்கும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மைகள் குறைவடைவதற்கும் இது வழிசமைக்கும். மேலும் உடல் எரிவு, சோர்வு போன்றவற்றையும் ஏற்படுத்தும்.

## மீன்பிடி பாதிக்கப்படல்

வீழ்ச்சியடைந்து செல்கின்ற சமுத்திர சுற்றோட்டங்கள் நலிவடைந்த சமுத்திர எழுச்சிகள் ஒரு சில வளமான மீன்பிடித்தளங்களைச் சுற்றி ஏற்படுகின்ற போசாக்கு குறைநிரப்பு நிலை என்பன மீன் உற்பத்தியில் பாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கும்.

## விவசாய நடவடிக்கைகள் பாதிப்பு

காலநிலையில் ஏற்படும் தளம்பல் போக்குகள் பயிர்ச்செய்கை உற்பத்திகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தும். இது உற்பத்திக் குறைவு, பொருளாதார இழப்புகள் என்பவற்றிற்கு வழிவகுப்பதுடன் விவசாயத்தில் நேரடியாக பெருமளவு குடித்தொகை தங்கியுள்ள வளர்முக நாடுகளில் வறுமை, பட்டினி போன்றன இடம்பெறுவதற்கு வழிசமைக்கும்.

## நீர்நிலைகள் வற்றும்

காலநிலையானது வரட்சியடையும்போது உள்ளுர் ஏரிகள், நதிவடிகால்கள், குளங்கள் என்பவற்றின் நீர்மட்டங்கள் விரைவாக குறைந்து விடுகின்றன. இது குறிப்பிட்ட பிரதேசத்தின் நீர்ப்பாசன நடவடிக்கைகள், நீர்மின்சார நடவவடிக்கைகள் மற்றும் உள்ளுர் கப்பற் போக்குவரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்.

வெப்பமாக்குவதற்கான சக்தி நுகர்வு வீழ்ச்சியடைதலும், குளிரூட்டுவதற்கான சக்தியின் கேள்வி அதிகரித்தலும்.

வெப்பத்துடன் தொடர்புடைய இறப்பு வீத அபாய அதிகரிப்பு. குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள், நோயாளிகள், சிறுவர்கள், குழந்தைகள் பாதிக்கப்படுதல்.





## புவி வெப்பமடைவதைக் குறைத்தல்

புவிவெப்பமடைவதைக் குறைப்பதற்கு வளிமண்டலத்தில் பச்சைவீட்டு வாயுக்கள் மிகையாகச் சேருவதனைக் குறைக்கவேண்டும். குறிப்பாக மேலதிக காபனீரொட்சைட் சேர்வதனைத் தடுக்குமுகமாக சாத்தியமான ஒவ்வொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவேண்டும். அத்துடன் தற்போதுள்ள காபனீரொட்சைட்டின் அளவினைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

## தாவரங்களை நடுதல்

தாவரங்களை நடுவதனூடாக புவிவெப்பமடைதல் குறைக்கப்படுகின்றது. தாவரங்கள் வளிமண்டலத்தில் உள்ள காபனீரோட்சைட்டை உறிஞ்சிக்கொள்வதுடன், ஒட்சிசனையும் வெளிவிடுகின்றது. காடழிப்பினுடைய விளைவுகளைச் சமநிலைப்படுத்துவதற்கு தாவரங்களை நடுதல் உதவி புரிகின்றது.

## சக்தி சேமிப்பு கருவிகளின் பயன்பாடு

சக்தி சேமிப்பு கருவிகளை வாங்கி பயன்படுத்துவதன் மூலம் புவிவெப்பமடைதல் மட்டுமன்றி சக்திப் பயன்பாட்டிற்குரிய சக்திச் செலவீட்டிற்குரிய பணத்தினையும்

அரைவாசியாகக் குறைத்துக்கொள்ளமுடியும். தற்போது மின்குமிழ்கள் மிகவும் குறைந்த சக்தியை வெளியிடக்கூடியவாறு தயாரிக்கப்படுகின்றன.

## மீள்புதிப்பிக்கக்கூடிய சக்தியின் பாவனை


உயிர்சுவட்டு எரிபொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து மீள் புதுப்பிக்கக்கூடிய சக்திவள மூலாதாரங்களான சூரியசக்தி, காற்று, கடல் அலை, நீர் முதலியவற்றை விருத்தி செய்து பயன்படுத்துவதனூடாகப் புவிவெப்பமடைதலைக் கட்டுப்படுத்தலாம். சூரிய சக்தியில் இயங்குகின்ற உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் சக்தியை மீதப்படுத்துவதுடன், சூழலுக்கு நேசமான பயன்பாட்டு முறையாகவும் அமையும்.

## மோட்டார் வாகனப் பாவனையைக் குறைத்தல்

வாகனத்திலிருந்து வெளியேறுகின்ற புகைகள் காபன் வெளியேற்றத்திற்கான பிரதான காரணியாக அமைவதனால் புவிவெப்பமடைவதற்கு வழிவகுக்கின்றது. அந்தவகையில் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதுடன், குறுகிய தூரப் பயணங்களுக்கு மோட்டார் வாகனப் பாவனையைக் குறைத்தல். குறைந்த தூரத்தை நடந்து செல்லல், துவிச்சக்கரவண்டியைப் பயன்படுத்தல் ஆகியவற்றின் மூலம் புவிவெப்பமடைதலைக் கட்டுப்படுத்தலாம்.

## மீள்சுழற்சி, மீள்பாவனை, குறைத்தல்

தின்மக்கழிவு முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படுகின்ற 3-R System இன் அடிப்படையான மீள்சுழற்சி, மீள்பாவனை, குறைத்தல் ஆகிய நடைமுறைகளைப் பின்பற்றுவதனூடாகவும் புவிவெப்பமடைதலைக் கட்டுப்படுத்தலாம். கண்ணாடி, கடதாசி , உலோகம் முதலிய பொருட்களின் மீள்பயன்பாடு மற்றும் மீள்சுழற்சி என்பவற்றின் மூலம் 80 சதவீதம் சக்தியைச் சேமிக்கமுடிவதுடன், புதிய பொருட்களை தயாரிப்பதனால் ஏற்படுகின்ற மாசுபடுதலையும் குறைத்துக்கொள்ளலாம். குறிப்பாக கடதாசி உற்பத்திகளை மீள்சுழற்சி செய்வதனூடாக கடதாசி உற்பத்திகான காடழித்தலைக் கட்டுப்படுத்துவதுடன், அது புவிவெப்பமடைவதையும் குறைத்துக்கொள்ளும்.




## காபன் வட்டம் பற்றி அறிவுறுத்தல்

வளிமண்டலத்தினை வந்தடைகின்ற காபனீரொட்சைட்டுக்கும் அங்கிருந்து வெளியேறுகின்ற காபனீரொட்சைட்டிற்கும் இடையில் வேறுபாடு காணப்படாதவாறு காபன் வட்டம் செயற்படுகின்றது. ஆனால் மேலதிகமாக காபன் சேர்கின்றபோது காபன் வட்டச் செயன்முறையில் குழப்பம் ஏற்படுகின்றது. எனவே காபன் வட்டத்தின் சமநிலையைப் பேணுவதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும்.

## விழிப்புணர்வூட்டல்

காலநிலை மாற்றங்களினால் ஏற்படுகின்ற சூழற்தொகுதி பாதிப்புகள் பொருளாதார, சமூக, அரசியல் தாக்கங்கள் சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினராலும் தெரிந்து கொள்ளப்படவேண்டும். வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிகரித்து வருகின்ற காபனீரொட்சைட்டின் மட்டத்தின் பாதகமான விளைவுகள் பற்றி எல்லோரும் அறியத்தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக தொலைக்காட்சி, பத்திரிகைகள், சுவரொட்டிகள் முதலியவற்றிற்கூடாக விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.




## அவதானிப்புகளும், எதிர்வுகூறல்களும்

அதிகரித்துச் செல்கின்ற வளிமண்டல காபனீரொட்சைட்டின் காலநிலை விளைவுகள் பற்றிய மிகவும் செம்மையான எதிர்வுகூறல்கள், உலகரீதியான வளிமண்டலவியல் தரவுகளின் அடிப்படையில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கணனி அடிப்படையிலான மாதிரி உருவங்கள்
- செய்மதிகள் மூலமான கண்காணிப்பு
- மேற்பரப்பு அடிப்படையிலான நடவடிக்கைகள்

தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிடின் உலகினைப் பாரிய அழிவிலிருந்து பாதுகாப்பது என்பது கடினம். எனவே கருத்துவேறுபாடுகளைக் களைந்து அனைத்து நாடுகளும் எதிர்கால உலகினை நிலைத்துநிற்கும் வினைத்திறன்மிக்க உலகாக எதிர்கால சந்ததிக்குக் கையளிக்க முன்வருவோம்.

## தூமியின் அறப்பணிகள்

கனடா, Nila Nilash அமைப்பின் ஊடாக, திருமதி. ஜெயா சந்திரன் அவர்களால், கிளிநொச்சி, ஜெயபுரம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு, இருபதாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கப்பட்டன.
தொடர்ந்து உதவும் தூயகரங்களைத் தூமி அன்புரிமையோடு வாழ்த்தி நிற்கின்றது!
“அறத்தான் வருவதே இன்பம்”



**கருத்து : ஜாதிகள் இல்லையடி பாப்பா**
**திரைப்படம் : கொளஞ்சி**
**எழுதியவர் : சரவணன்**

திரைத்தமிழ்

**சமுத்திரக்கனி :-** (ஒரு நமட்டு புன்னகையுடன்) நம்ம சாமிங்கன்னு நீங்கள் சொல்ற சாமிங்களே வெளியில இருந்து வந்த சாமிங்கள் தான்யா. வடக்க இருந்து கொண்டு வந்த சாமிங்களை எல்லாம் ஊருக்கு நடுவுக்க வைச்சிட்டு. உங்க சாமிங்கள கொண்டு போய் ஊருக்கு வெளிய வைச்சவங்க தானே நீங்கள். இப்ப வடக்கத்தான் எழுதிய சாஸ்திரத்தை நம்ம சாஸ்திரம்னு சொல்லி நம்ம கூடவே இருக்கிறவன தீட்டுக்காரனு சொல்லி ஊருக்கு வெளியே ஒதுக்கி வைச்சிருக்கிறீங்க.

தமிழ்நாட்டை விட்டு வெளியே போனா மட்டும் தான்யா தமிழன் தமிழனு சொல்றீங்கள். ஆனா தமிழ்நாட்டுக்கு உள்ள இந்த ஜாதிக்காரன் அந்த ஜாதிக்காரனு பிரிஞ்சு தானே நிக்கிறீங்க. உன்கூடவே இருக்கிறவன உன் வீட்டுக்குள்ள வர வேண்டாம்னு சொல்லுதே ஒரு சாஸ்திரம் அந்த சாஸ்திரத்தை எழுதினவன் வீட்டுக்க நீ போக முடியுமா? முடியாது ஏனுனா? அவனுக்கு நீ கீழ் ஜாதி. இதையும் அந்த சாஸ்திரம் தான் சொல்லுது.
என்ன குருக்கள்வால்,

**குருக்கள் :-** சொல்லுங்கோ,

**சமுத்திரக்கனி :-** நம்ம கோவில் தர்மகத்தாவ கற்ப கிரகத்துக்குள்ள விடுவயலா?

**குருக்கள்:-** அது எப்படின்னா? கற்ப கிரகத்துக்குள்ள பிராமணள மட்டும் தானே அனுப்ப முடியும். சாமியே சொல்லியிருக்காலே.

**சமுத்திரக்கனி :-**
ஆ!! கேட்டுச்சா? உன்னை பக்கத்தில வரக்கூடாதுனு சொல்ற சாமிப் பேச்சை கேட்டு, உன் பக்கத்தில இருக்கிற நம்மாளுங்கல கீழ் ஜாதி காரஙகள்னு ஒதுக்கி வைச்சிருக்காய். காலம் மாறிட்டிருக்குய்யா. இந்தியாவிலேயே தமிழ்நாட்டுல மட்டும் தான்யா பேருக்கு பின்னால ஜாதிய சேர்த்துக்குறதில்லை. ஏன் தெரியுமா? இங்க தான் பெரியார் என்ற ஒரு மனிசன் பிறந்தார்.

இன்னைக்கு பஸ்ஸில, ரெயின்ல போகும் போது பக்கத்தில உக்காருறவன். எந்த ஜாதினு கேட்டிட்டா உக்காருறீங்கள். சினிமா தியேட்ர்ல, ஹோட்டலில, ரேசன் கடையில, இலவச கியூல எங்கயுமே ஜாதி பார்க்காம முட்டி மோதிக்கிறீங்கள். ஆனா ஜாதிகள் இல்லையடி பாப்பானு சொல்லிக் கொடுக்குற பள்ளிக்கூடத்தில மட்டும் ஏன்யா ஜாதி ஜாதினு அடம்பிடிக்குறீங்க.
போங்க! போய்ப் பிழைப்ப பாருங்கயா!

(அனைவரும் கலைந்து செல்கின்றனர்)
(எதிராளியில் ஒருவனின் அருகில் சென்று) என்ன வேலப்பா காவி வேட்டில கறை பட்டிருக்கு ஒன்னு துவைச்சு போடு இல்லைனா கழட்டிப்போடு (நமட்டு சிறு புன்னகையும்).

மித்ரசகி



# பார்வைகள் பலவிதம்

ஞாலம் போற்றிய தமிழர் பண்பாடு!

நாமுண்டு சிறந்தாலும் நாலறிவும் வாழவென,
வகுத்துவைத்த வழிதனை என்ன சொல்வேன்? ஆறறிவுக்கும் அதன்கீழறிவுக்கும் - உறவுப் பாலம் போட்டான்!
பசித்திருக்கும், பறவையினம், உய்யவெனவே கோலம் போட்டான்!
காலம் உள்ளவரை வாழும், மனித நேயமே காணும்!

ஆ. சசிநாத்

அவள் போட்ட கோலம்
அழகாயிருந்தது..
அதை கோழி தின்ற போது
அவள் அழகாயிருந்தாள்...

மொழியருவி

கும்பமிட்ட குலமகன் அறியான்.....
கோலமிட்ட குலமகள் அறியாள்......
இக்கோழிகள் கொண்டு நடத்தும்
கூடி உண்ணும் தமிழ்ப்பண்பை.......

பரன்

வாயில்லா பிராணிகளும் வாழவே
மூடர்நம்பிக்கைகள் முன்னோர்கள் வகுத்தது.

தி. சேந்தன்

மார்கழி மாதம் முழுவதும் கோலம் போடச்சொல்லியிருக்கிறார்கள். யார் போடுகிறீர்கள்? மழை வெள்ளம் மண் எல்லாம் தேங்கி நிற்கும் மாதத்தில் உணவுக்கு கோழிகள், அணில்கள் போன்ற உயிரிகள் எங்கே போகும்? பொங்கலில் மட்டும் போதாது. நாளும் ஒரு கைப்பிடி கொடுங்களேன். வயிறாற உணவளித்தல் உயர் தர்மம். நாளும் கோலம் போடுங்கள். வீடும் அழகாகும். வாழ்வும் அழகாகும்.

ஜோதி



கோலங்கள் அழகுக்கானவை...
கோலங்கள் சம்பிரதாயங்களுக்கானவை...
கோலங்கள் அரும்பசி போக்குபவை...

அமலன்

வண்ணக் கோழிகளே
கோலத்திலிருந்து எதை வேண்டுமானாலும்
எடுத்துக் கொள்ளுங்கள்
அதன் அழகை மட்டும் விட்டுவிடுங்கள்
எமக்கும் உமக்கும் கோலம் ஒன்றுதான்
ஆனால்
அர்த்தங்கள் வெவ்வேறு

இராவி நவிலன்

தினமும் கோலம் போடலாம் தானே..
மளிகைக்கடைக்காரன் மனதுக்குள்ளும்
கோழிகள் தமக்குள்ளும் பேசிக்கொண்டன.

சஜன்

தன்னில் தெரியும் அழகின் உச்சத்தை விட
தன்னை கொத்தி உண்ணும் கோழிகளை எண்ணியே கர்வம் கொள்கின்றன கோலங்கள்

வினோ

எறும்புகள் விரைவதற்குள்
காகங்கள் கரைவதற்குள்
காருருள் வருவதற்குள்
சிந்திய கோலத்தில்
சிக்கியதெல்லாம் இலாபம்
என்றன கோழிகள்

இனியவன்

மாட்டுச்சாணியால் மெழுகி அதில் அரிசி மாவால் கோலமிட்டு வாழை இலையில் நெல் பரப்பி அதில் கும்பமும் வைத்து புத்தரிசியில் பொங்கி சூரியனுக்கு வணக்கம் செய்வது வெறும் பண்டிகை அல்ல அதனுள் தமிழன் இயற்கைஇ சுற்றுச் சூழல்இ விலங்கு மற்றும் பறவைகள் மீது கொண்ட அதீத கரிசனை புலப்படும் அதனாலேயே கோலம் வீட்டுக்கு சிறப்புத்தரும் என்று எமது மூதாதையர் சொல்லிச்சென்றனர். ஆனால் இன்றைய காலத்தில் அரிசிமா கோலம் போட்டால் எறும்பு வரும் என்று மலேத்தியனை மாவுடன் கலந்தோ அல்லது சுண்ணாம்பு தூளினாலோ கோலம் போடுபவர்களை என்னவென்று சொல்வது? அவர்கள் எல்லாம் கோலமே போடாமல் இருப்பது தான் உலகுக்கே நன்மை தரும் என்பது தான் நிதர்சனம்.

மகி

மூட்டையில் நெல்
விதைக்கையில் விதை
முளைக்கையில் நாற்று
வளர்கையில் பயிர்
முற்றியதும் கதிர்
அறுத்ததும் நெல்
உடைத்ததும் அரிசி
சமைத்தால் சோறு
இடித்தால் மா
சமைத்தால் பிட்டு
சிந்தினால் கோலம்

வானதி

காலம் காலமாய் கடத்தி வந்து
கோலம் மூலமாய்
பால(ச)ம் படைத்தான்
ஞாலம் அறிந்திரா நம் பாமரன்
பறவைகட்கும்...........

குரு

மனிதர்கள் பண்டிகைகள்
கொண்டாடினால்
பயமாயிருக்கிறது. அழுக்காக
அநாதரவாக இருந்த
எமது இருப்பிடங்களை
அழகாக்குகிறார்கள். எம்மை
புது மாப்பிள்ளைக்கு மாமியார்
வீட்டில் நடக்கும் மரியாதை
போல் அந்த சில நாட்கள்
எமக்கு கொண்டாட்டமாக
இருக்கும்.

ஆனால்
சில வேளைகளில் தான்
எமக்கு விதம் விதமான உணவு
கிடைக்கும்.
பல வேளைகளில் நாம்
உணவாகி விடுவோம்.

கோலத்தை கொத்திக்கொண்டே
கோழிகள் பேசிக்கொண்டன.

சாய்

## அடுத்த இதழுக்கான சிந்தனை...



இந்த படத்திற்கான உங்கள் பார்வையை உலகம் பார்க்கச் செய்ய எழுத்துக்களாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்

thumi2016@gmail.com

www.facebook.com/Thumi06

## யாழ் வெள்ளம் 2020 ஒரு கண்ணோட்டம்

### கட்டுமானத்தவறுகள்

அவதானித்த வரையில் கட்டுமானத்தில் விடப்பட்ட இரு தவறுகளும் இந்த வெள்ள அனர்த்தத்திற்கு ஏதுவான காரணங்களாகின்றன.





ஸ்டான்லி வீதியில் காணப்படும் கால்வாயின் வாயின் சில பகுதிகளை மூடும் வகையில் நீர்க்குழாய்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
இதனால் அந்த குழாய்கள் கால்வாயினூடாக வரும் கழிவுகளை தடுத்து நீரோட்டத்தை தாமதப்படுத்துகின்றன.



புல்லுக்குளத்திற்கான கால்வாய் போதியதாக இல்லை. இந்த வருடம் அந்த முனீஸ்வரம் வீதி உயரமாக்கப்பட்ட போதும் அந்த கால்வாய் கண்டு கொள்ளப்படாமையால் வடிகாலால் வந்த பெருமளவு வெள்ளம் கால்வாயினூடு செல்ல தாமதமானது.

07.12.2020 திங்கள் அதிகாலை வீதி வெட்டப்பட்டு வெள்ளம் அனுப்பப்பட்டதால் யாழ் நகரம் வெள்ளக்காடாகவில்லை. குப்பைகள் ஓரளவு வடிகால்ப்பாதைகளிலிருந்து அகற்றப்பட்டமையும், இந்த கால்வாய் உடைக்கப்பட்டமையுமே உடனடியாக வெள்ளம் ஞாயிறு இரவே வடிந்தோட காரணமாயின.



கப்பச்சினோ கதைகள்


தொண்டரடிப்பொடியன்



தற்காலிக தீர்வாக வெட்டப்பட்ட கால்வாய் மீள மூடப்பட்டுள்ளது. யாழ் நகரின் பெருமளவு வெள்ளத்தை புல்லுக்குளத்துக்கு அனுப்பும் முக்கிய பணியை ஆற்றுவதற்கு இந்த கால்வாயின் அளவு போதாது. அடுத்த பெருமழைக்கிடையில் அகன்ற ஒரு கால்வாய் இவ்விடத்தில் நிர்மாணிக்கப்பட்டால் வெள்ள அசௌகரியங்கள் இயன்றவரை தவிர்க்கப்படும்.

## வீட்டோடு குளங்கள்

ஆனால், யாழ்ப்பாணத்தின் இன்னொரு பகுதியான நல்லூரில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு குப்பைக்கழிவுகளையும், ஓரிரு கட்டுமானங்களையும் மட்டும் குறை கூற முடியாது. பெரும்பாலான வீடுகளில் மண் தரைகள் எல்லாம் கல் பதித்து கொங்கிறீட் தரைகள் ஆக்கப்பட்டமையும் முக்கிய காரணமாகிறது. மழைநீர் மண்ணால் உறிஞ்சப்படுவதை இது முற்றாக தடுக்கிறது. மழை வெள்ளத்தால் நல்லூர் கிணறுகளின் நீர்மட்டம் பெரியளவில் உயராமையும் இதை உறுதி செய்கிறது. எனவே எதிர்காலத்தில் நிலத்தடி நீர் கிடைப்பனவுக்கு எமது இந்த நடவடிக்கைகள் பாரிய அச்சுறுத்தலாக அமையும்.








பார்வைக்கு சமதரையாக தோன்றினாலும், மேடு பள்ளங்களை கொண்ட நில அமைப்பைக்கொண்டதே யாழ் மாவட்டம். அதனாலேயே மயிலிட்டிக்கு அண்மையாக ஆரம்பிக்கின்ற வழுக்கியாறு அராலி வரை ஓடி கடலை அடையக்கூடியதாக உள்ளது. பல்வேறு பட்ட அளவுகளையும் வடிவங்களையும் கொண்ட நீர் கொள்ளும் பகுதிகளை (**basin**) கொண்டதே எமது தரைத்தோற்றம். நீர் ஏந்து பகுதிகளுக்குரிய (**catchment area)** நீர் கொள்ளும் பகுதிகளை அந்த மழை நீர் இயற்கையாகவே அடையும் வகையில் தண்ணீர் தனக்கான பாதையை தானே அமைத்துக்கொள்ளும். அந்த பாதைகளுக்கு குறுக்காக மனித தலையீடுகளால் கட்டுமானங்கள் அமைக்கப்படும் போதுதான் பிரச்சனையே ஆரம்பமாகிறது.

புதிய கட்டுமானங்கள் கட்டப்படும் போது அந்த நீர் போகும் பாதையை இயன்றவரை குழப்பாமல் கட்ட வேண்டும். வீதிகள் கட்டுமானத்தில் இந்த தேவைக்காகவே கால்வாய்கள் **(Culverts)** கட்டப்படுகின்றன. வீதிகளின் வகைகளுக்கு ஏற்ப வெள்ள மட்ட அளவை கருதி, வீதிகள் உயர்த்தப்படும். அவ்வாறு உயர்த்துவதால் பள்ளமான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குவதை தவிர்க்க உரிய இடங்களில் கால்வாய்கள் கட்டப்பட்டு நீரானது மற்றய பகுதிக்கு

வீதிகள் உயரமாகப்போடுவதால் மழை தேங்குகிறது என்கிற எண்ணக்கரு தவறானது. ஏனென்றால் வீதிகள் உயரமாக்கப்படுவதே மழை வெள்ளம் வீதிகளின் மேலாக பாய்ந்து வீதிகளை சேதமாக்குவதை தடுப்பதற்காகவே ஆகும். மழைநீருக்கு பாதை விட்டே வீதிகள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆனால் அந்த பாதைகளையும் தடுக்கும் விதமான மனித செயற்பாடுகள் தான் வெள்ளத்திற்கான பிரதான காரணம்.

அனுப்பப்படும்.
நீரோடும் பகுதிகளுக்கு குறுக்காக மதில்களை கட்டும் போது நீர் வழிந்தோட உரிய வழிகளை கையாள வேண்டும்.




## நலங்கெட புழுதியில் எறிவதுவோ

இவற்றைவிட முக்கியமாக இருந்ததை இன்னொன்றாக்கிய செயற்பாடுகளும் இந்த வெள்ளத்திற்கான இன்னொரு காரணம். அதாவது மன்னர் காலங்களில் மிகச்சிறந்த வடிகாலமைப்பு கட்டமைப்பு காணப்பட்டது. படிக்கட்டு முறையில் வெள்ளநீர் சேமிக்கப்பட்டதோடு மேலதிக நீர் கடலோடு கலக்க விடப்பட்டது. அதாவது குறிப்பிட பிரதேச மழை வெள்ளமானது அந்தந்த பகுதிகளுக்கான குளங்களை அடைந்து, அந்த குளங்கள் நிரம்பலடையும் போது மேலதிக நீர் அடுத்த குளத்திற்கு கால்வாய்களூடு அனுப்பப்பட்டு, பின் அடுத்த குளம் என்று பெரும்பாலான வெள்ளநீர் குளங்களில் சேமிக்கப்படும். கடலுக்கு அருகில் உள்ள குளமும் இறுதியாக நிரம்பும் வரை இந்த தொடர் எல்லா குளங்களையும் நிரப்பும். கடலுக்கு அருகிலுள்ள குளமும் நிரம்பினால் மேலதிக நீர் கடலுக்கு அனுப்பப்படும். இந்தவாறான ஒரு அதி உச்ச தொழில்நுட்பத்தோடு தேவையான இடங்களில் குளங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் அபிவிருத்தியின் காரணமாக பின்னாட்களில் சில குளங்கள், குளங்களுக்கான கால்வாய்கள் மூடப்பட்டன. இதனால் அந்த படிக்கட்டுத்தொடர் அறுந்து வெள்ளநீர் அடுத்த குளத்திற்கு அனுப்புவது தடுக்கப்பட்டு மொத்த செயன்முறையையே குளப்பி விட்டது.

இனி இந்த படிக்கட்டு செயன்முறையை பழையபடி நிர்மாணிப்பது கடினமானது. ஏனெனில் முக்கியமான சில குளங்கள் மூடப்பட்டு கட்டடங்களும் எழும்பிவிட்டன. எனவே, தற்போது தொழிற்படு நிலையில் உள்ள குளங்களை வைத்து புதிய படிக்கட்டு முறை வடிகாலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டு ஆழமான கற்றல் (**Site investigation**) மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் ஒரு பிரச்சனைக்கான சரியான காரணம் கண்டுபிடிக்கப்படுமானால், அண்ணளவான தீர்வு கூட வெற்றியளிக்கும். ஆனால் அண்ணளவான காரணங்களை வைத்துக்கொண்டு, அதற்கான தீர்வுகளை மிகச்சரியாக முன்வைத்தாலும் அது பயனற்று போய்விடும் **(exact reason is better than approximate solution).**

அதோடு நகரப்பகுதிகளில் வாழ்பவர்களில் பெரும்பாலானவர்கள் பூர்வீகமானவர்கள் இல்லை. எனவே இவர்களின் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு அபிவிருத்தித் திட்டங்களை வடிவமைக்க முடியாது. உதாரணமாக யாழ் புகையிரத நிலையத்தை அண்டிய கால்வாயானது எந்த திசையில் வெள்ளத்தை அனுப்புகிறது என்பதில் குழப்பம் இருக்கிறது. ஆரம்பத்தில் நரிக்குண்டுக்குளத்தை நோக்கி இருந்ததாகவும் பின்னர் அது ஆரியகுளத்தை நோக்கி மாற்றப்பட்டதாகவும் கூறுகிறார்கள். விளைவு, இரு வழிகளிலும் செல்ல முடியாமல் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

எனவே முறையான ஆய்வு செய்து, இருந்தவற்றையும் இருப்பவற்றையும் ஆவணப்படுத்த வேண்டும்**(documentation)**. அப்போது தான் இந்த வடிகாலமைப்பு செயன்முறையை குழப்பாமல் எதிர்கால அபிவிருத்திகளை திட்டமிடலாம்.

இனி வருங்காலங்களில் வெள்ளம் அனர்த்தமாக்கப்படாது வளமாக்கப்பட நடவடிக்கைகள் எடுப்போம்.

*இப்படிக்கு,*
*பாதிக்கப்பட்டவர்களில் ஒருவன்*




நன்றி
யாழ் மாநகரசபை

# அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி

இ.தனிஷ்ரன்

"முதலெழுத்து தாய்மொழியில் தலை எழுத்து
யார் மொழியில்
என் வாழ்க்கை வான்வெளியில்"

நெஞ்சை அழுத்தும் வலி. யாரிடமும் சொல்ல முடியாத சோகம். கண்கள் அழுது கண்ணீர் வரண்டு முழிகள் பிதுங்க மெத்தை மேல் கிடக்கிறான்.

"நாளும் அழுது தீர்த்ததாலே கண்கள் ஏழை ஆனதே"

வாழ்க்கையிலே தோற்றுவிட்டேனே! இவ்வளவு நாளும் வாழ்ந்து என்ன பலன்? தோல்வியிலேயே துவண்டு கிடப்பது தான் என் விதியா? அதிர்ஷ்டம் என்பதே இல்லாதவனா நான்? என்னை யாருக்கும் பிடிக்காதா? நான் அவ்வளவு அசிங்கமா? தாழ்வு மனப்பான்மை முழுவதுமாய் கவ்விக்கொள்கிறது.

//காயம் கண்ட இதயம் ஒரு குழந்தை போல
வாயை மூடி அழுமே சொல்ல வார்த்தை இல்லை//

அம்மா அம்மா என்று அம்மாவிடம் சொல்லிக் கதற வேண்டும் போல் இருக்கிறது. சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது தவிக்க, கண்களின் ஓரமாய் கண்ணீர் வழிந்து காய்ந்த தடம் வழியே ஓரிரு துளிகள் மெல்ல வழுகி ஈரம் சேர்க்கிறது.

"சில காலமாய் நானும் சிறை வாழ்கிறேன்
உனைப் பார்ப்பதால் தானே உயிர் வாழ்கிறேன்
தூக்கம் விழிக்கிறேன் பூக்கள் வளர்க்கிறேன்





சில பூக்கள் தானே மலர்கின்றது
பல பூக்கள் ஏனோ உதிர்கின்றது
பதில் என்ன கூறு பூவும் நானும் வேறு"

காதுக்குள் சித்ரா இதே வரிகளை மீண்டும் மீண்டும் ரீங்கரித்துக்கொண்டிருக்க சுனாமியாய் ஆர்ப்பரிக்கும் நினைவுப்பேரலைகளில், மூழ்கிப்போன கற்பனை காகித ஓடங்களை துருவி துருவி தேடியோடி களைத்திருக்கிறது மூளை.

"நொடிகள் எல்லாம் நோய்பட்டு
எனை சுமந்து போக மறுக்கிறதே
மொழிகள் எல்லாம் முடமாகி
என் மௌனத்தைக் கூட எரிக்கிறதே
சுவாசிக்க கூட முடியவில்லை
எனை வாசிக்க மண்ணில் எவருமில்லை
என்னை எனக்கே பிடிக்கவில்லை"

தோல்வி! காதற்தோல்வி. முதற் காதல் தோல்வி.

//வெள்ளை சிரிப்புகள் உன் தவறா?
அதில் கொள்ளை போனது என் தவறா?
பிரிந்து சென்றது உன் தவறா?
நான் புரிந்து கொண்டது என் தவறா?
ஆண் கண்ணீர் பருகும் பெண்ணின் இதயம்
சதையல்ல கல்லின் சுவரா?//

ஜனிக்க முன்னரே மரித்த காதல். இவன் தனது காதலை சொன்ன அடுத்த நிமிடங்களிலேயே மறுப்பு சொல்லிவிட்டாள் காதலி. இங்கே ஓராண்டு காலக்காதல் ஓடம் ஒடிந்துபோயிருக்கிறது.

ரசிக்கும் சீமானே!

//கடைசியில் எல்லாம் பொய்கள்
என் பிஞ்சு நெஞ்சு தாங்குமா?//

ஓராண்டுக்கு முன் ஓர் இரவில் முகப்புத்தகத்தை மேய்ந்து கொண்டிருந்தவனின் பெருவிரல் அன்ரொயிட் திரையை தட்டித்தட்டி மேலிழுக்க, ஒரு படம். பெண்ணின் படம். கண்கள் திரையில் நங்கூரம் போட்டன. ரசித்தன! சிரித்தன!

//மனம் பச்சை தண்ணீ தான் பெண்ணே
அதை பற்ற வைத்தது உன் கண்ணே//

லவ்லி. நல்லா இருக்காளே! யாருடா இது? வெளியில் போய்வந்த தாயைக் கண்டதும் குதூகலித்து தன்னை தூக்குமாறு கைகளை நீட்டும் குழந்தை போல!
சிரிக்கும் கண்கள். சிவக்கும் வதனம். முத்துக்கள் தெறிக்கும் புன்னகையில் குறுநகை. கண்ணை கவரும் கறுப்பும் சிவப்பும் தோய்ந்த துணியில் அணி.

"யாரிந்த தேவதை யாரிந்த தேவதை"



நமக்கு தோதாய் இருப்பாளா? வெள்ளை. வடிவு. கியூட். சின்ன பிள்ளை போல இருக்கே! கட்டையா இருக்கும் போலயே! இவள் எனதானால்???ஏதேதோ விபரிக்க முடியாத தடுமாற்றங்கள். சலனம்.

//காதல் என்ற ஒன்று அது கடவுள் போல
உணர தானே முடியும் அதில் உருவம் இல்லை//

ஏன் இப்படியெல்லாம் யோசிக்கிறேன் என்று யோசித்து மறந்து போக முயற்சித்தான்.



அவள் இவனுடைய முகப்புத்தக நண்பர் என்று தெரிகிறது. எப்பொழுது நட்பு அழைப்பு வந்ததென்றே தெரியவில்லை. இன்ன பிற துரும்புத்தகவல்களை முகப்புத்தகம் தந்தது. ஏன் என்று தெரியாமல் அவளது முகப்புத்தகத்தை அடிக்கடி மேய்வான். தனது சுவரில் வரும் அவள் போட்டோக்களுக்கு ஹா ஹா சிமைலியை வேண்டுமென்றே அமத்துவான். அவளை எங்கேனும் இடையில் கண்டால் உள்ளாலே ஏதோ ஒரு சிலிர்ப்பு ஒட்டிக்கொள்ளும். இவளுடன் கதைக்க வேண்டும் போல இருக்கிறதே!

"இருதயம் முறைப்படி துடிக்கவில்லை
இதற்கு முன் எனக்கிது நிகழ்ந்ததில்லை
நான் கண்ட மாற்றம் எல்லாம் நீ தந்தது நீ தந்தது"

சில மாதங்களில் தொலைபேசி இலக்கத்தை எடுத்தான். முகப்புத்தகம் அவளுக்கு பிடித்தவற்றை சொல்லித்தர வாட்ஸ்அப்பில் பாலம் போட்டு சொற்பாணங்கள் இரண்டு பக்கமும் பாய்கிறது. தரவுகள் செறிகிறது.

அவள் வாசிப்பாள். அவள் கவிதை எழுதுவாள். அவள் திரைப்பாட்டுக்கு ரசிகை. உரையாடல்கள் நீள, "அவள் தான் என் மனைவி" என்று இவன் உணர்ந்த கணங்களிலிருந்து
அந்நிய திரை மேவ அவளிடம் கொஞ்சம் கொஞ்சமாய் வழிந்து கடவுள், கனவு, எதிர்கால





திட்டங்கள் முதல் அவளுக்கு சுவேதா மோகன் பிடிக்கும் என்பது வரை பக்கம் பக்கமாய் அவளை துருவினான்.

//சுகமான குரல் யார் என்றால் சுசீலாவின் குரல் என்றேன்
எனக்கும் அந்த குரலில் ஏதோ மயக்கம் என நீ சொன்னாய்
கண்கள் மூடிய புத்தர் சிலை
என் கனவில் வருவது பிடிக்கும் என்றேன்
தயக்கம் என்பதே சிறிதும் இன்றி
அது எனக்கும் எனக்கும் தான் பிடிக்கும் என்றாய்//

அவள் பிடித்தங்களையும் அவளுக்கு பிடிக்காதவற்றையும் வினாக்கணை தொடுத்து பதில் பறித்து, அவள் விடைகளை கொண்டு "தன் மேல் அவளுக்கும் விருப்பம்" என்ற கற்பனையும் இவன் காதலுடன் சேர்ந்தே வளர்ந்தது. மயக்கம்!

"எனக்கு பிடித்த பாடல் அது உனக்கும் பிடிக்குமே
உன் மனது போகும் வழியை எந்தன் மனது அறியுமே"

காதலின் பாரம் தாங்காது இவன் மூச்சுமுட்டி திண்டாடி காதல் நோயில் தகித்து தகித்து இனிமேலும் வேக முடியாது என்ற கணத்தில், தன் காதலை அவளிடன் ஒப்பித்தான்.



"உன்னைக் கண்ட நிமி'த்தில் உறைந்து நின்றேன்
மறுபடி ஒரு முறை பிறந்து வந்தேன்
என் சுவாசக் காற்றில் எல்லாம்
உன் ஞாபகம் உன் ஞாபகம்"

இப்படியாக இரண்டு மூன்று நாட்களாய் கவிதைத்தமிழில் உருகி ஆயிரம் கனவுகளுடன் ஆர்ப்பரிக்கும் மனதோடு, அவள் "ஓம்" சொல்லுவாள் என்ற நம்பிக்கையில் எழுதிய கடிதத்தை அதுவரை வேண்டாத அத்தனை தெய்வத்தையும் கும்பிட்டு நேர்த்தி செய்து வாட்ஸ்ஆப்பில் அஞ்சல் செய்தான்.

சில நிமிடங்களில் பதில். மன கொந்தளிப்பு அடங்கிய இவன்.

//அடி உனக்கும் உனக்கும் எல்லாம் பிடிக்க என்னை ஏன் பிடிக்காது என்றாய்?//



தோற்றுப்போய் இருக்கிறான். தோல்வி இவனுக்கு புதிதில்லை. மீண்டும் ஒருமுறை கடவுள் இல்லை என்பது உறுதியாகியிருக்கிறது. அவசர பட்டுட்டேனா? இன்னும் பொறுமை காத்திருக்கலாமோ? கேள்விகள் துளைக்கிறது. வலி கசிகிறது.

ஏமாற்றம் , வெறுப்பு, தோல்வி, விரக்தி, அழுத்தம், தவிப்பு, இருட்டு, சோகம், வெறுமை.

//சர்க்கரை நிலவே பெண் நிலவே
காணும் போதே கரைந்தாயே
நிம்மதி இல்லை ஏன் இல்லை நீ இல்லையே//

உயிர் இருக்கும் உடலொன்று பிணமாய் கிடக்கிறது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 | | ■ | 4 |
| 5 | | | ■ | 6 | | ■ | |
| | ■ | ■ | 7 | | | | |
| ■ | 8 | 9 | | ■ | 10 | | |
| 11 | | | | | ■ | 12 | |
| ■ | ■ | | | 13 | | | |
| 14 | ■ | | | | ■ | ■ | ■ |
| | ■ | | ■ | 15 | | | |




**அனுப்ப வேண்டிய.....**

இறுதித்திகதி :- 13.02.2021
முகவரி :-
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1.இரண்டாம் தமிழ் சங்கம் தோன்றிய இடம்
5.கால்நடைகளின் உணவு
6.நாள்
7.சூரியன்
8.நாடு
10.தூக்கத்தில் வருவது (குழம்பி)
11.தொடக்கம்
12.இதனால் நாடு செழிக்கும்
13.தமிழர் தெய்வம்
15.வலுவிழந்தோர் நடக்க உதவுவது

## மேலிருந்து கீழ்

1.வாசலில் இருப்பது
2.தீய செயல்களை செய்பவன்
3.காதலுக்குரிய பெண்தெய்வம்
4.இலங்கையில் சோழர்களின் தலை நகரம்
7.சிறுவர்கள் விளையாடுவது
9.உரையாடல்
13.இது இல்லாமல் வாழ்வது இழுக்கு
14.முட்டைக்குள் இருப்பது

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 கி | ரே | க் | 2 க | ம் | ■ | 3 ப | 4 தி |
| ■ | ■ | 5 ம் | ட | வ | 6 க | ■ | ல் |
| 7 ள் | வு | ட | க | ■ | 8 மு | ல் | லை |
| 9 கு | ம் | ப | ம் | ■ | 10 கு | ■ | ■ |
| ■ | ■ | 11 து | று | 12 வ | று | ம் | ■ |
| 13 மா | ம | டு | ■ | ர | வ | ■ | 14 த |
| ன | ■ | ப் | ■ | ம் | ர் | ■ | லை |
| 15 ம் | பா | பு | ■ | பு | ■ | 16 க | வி |

## குறுக்கெழுத்துப்போட்டி - 14

### பரிசுக்குரியவர்

ந. சரண்யன்
தரம் 11
வவு/தமிழ் மகா வித்தியாலயம்

# 05 ஈழச் சூழலியல்

எமது ஈழப்பரப்பானது மிகப்பெரிய சூழல்தொகுதியினுடைய தரிப்பிடமாகும்,அதே சமயம் காலநிலை மாற்றத்தின் காரணமாக பாரிய அபாய வலயத்துக்குள் சிக்குண்ட பகுதியாகவும் காணப்படுகின்றமை மறுக்க முடியாத உண்மையாகும்.எமது கடந்தகால காலநிலை மாற்ற தரவுகளின் போக்கை கொண்டு எதிரகாலத்துக்கான காலநிலை தரவுகளை ஆராய்கின்ற போது மேலும் அபாயகரமான சூழ்நிலைக்கு எமது சூழல்தொகுதி தள்ளப்படுவதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுகின்றன.கடந்த 2000ம் ஆண்டு தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியில் காடழிப்பு சதவீதமானது 1.46%இனால் வருடாவருடம் அதிகரித்து வருகின்றது.இத்தோற்றப்பாட்டுக்கு பல்வேறு காரணங்கள் துணையாகின்றன.

1)பொருளாதாரரீதியாக நாடும், கைத்தொழில்துறையும் நெருக்கடிக்குள்ளாதல்
2)பாரிய அபிவிருத்தி திட்டங்கள்
3)பாரிய ஏற்றுமதி செய்கை விருந்தியாக்கம்
4)மீள்குடியேற்ற திட்டங்கள்

என்பனவாகும்.இச்செயற்பாடுகள் பொருளாதாரரீதியாக வருவாயினை பெற்றுத்தருபனவாக இருந்தாலும்,சூழலியல் சார்ந்து அங்கிகளின் இருப்பு, உணவுச்சங்கிலி, சூழல் சமநிலை, காலநிலை என்பவற்றை பெரிதும் நெருக்குதலுக்கு உள்ளாக்குகின்றன.



இதன்காரணமாக காட்டு விலங்குகள் தமது இருப்பிடங்களை மாற்றியமைக்க முயல்வதோடு அவை மனித வாழ்விடங்களுக்கு நுழைந்து அழிவுகளை ஏற்படுத்துகின்றன. இன்றும் நாடாளவிய ரீதியில் பேசப்படும் மனித-யானை முரண்பாடு(Human elephant conflict) இதற்கு எடுத்துக்காட்டாகும்.



நாம் அபிவிருத்தி, முன்னேற்றம், நகரமயமாதல் எனப்பேசிக்கொண்டிருக்கும் இதே ஈழவளநாட்டில்தான் எத்தனையோ அடிப்படை வசதிகள் கூட இல்லாத கிரமங்கள் காணப்படுகின்றன.முறையாக திட்டமிடப்படாத பாரிய அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும் இதே தேசத்தில்தான் பல்வேறு கிராமங்களில் வீதிகளின் பெயரில்லாமல் திசைகளை குறிப்பிட்டு முகவரி எழுதும் மக்கள் வாழ்கின்றனர், எனவே அபிவிருத்தியென்பது எடுத்து முடித்துக்கொண்டு இருக்கின்றவற்றை அழிக்கின்ற செயற்பாடாக அல்லாமல் சரியான திட்டமிடலுடன் சகல பிரதேசங்களுக்குமான சமனான வளப்பகிர்வுடன் சூழலியல் கரிசரனையுடன் மேற்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.நாம் எம்மை உயர்நன்நடத்தையான

சூழலியல் சமூகமாக கட்டமைத்து பயணிக்க வேண்டிய தேவைகள் இருப்பினும் அவற்றை நாம் நடைமுறைப்படுத்த உத்வேகம் கொள்வதில் பின்நிற்கின்றோம் என்பதே வருத்தம். எமது வாழ்வியல் நிலப்பரப்புக்கும் நம் தலைநகருக்குமான ஓர் ஒப்பிடலை மேற்கொண்டால், எமது தலைநகரின் பெருமளவான அரச பொது வைபவங்கள் நடாத்தப்படுவதும், பெருமளவான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை உள்ளீர்க்கும் பகுதியாகவும் காணப்படுகின்ற காலிமுகத்திடலில் நிலக்கீழ் நீரினுடைய தன்மை பற்றி யாரும் சிந்தித்தது உண்டா? கடலை அண்டி உவர்த்தன்மையான நீரேயாகும்.அதே போல் எமது பகுதிகளில் தரிசாக கவனிப்பாரற்று ஏராளமான கடற்கரைகள் கிடக்கின்றன. உலக வல்லாதிக்க நாடான சீனா காலி முகத்திடல் கடற்கரைக்குள் மண்நிரப்பி Port City என்கின்ற சரியான EIA படிமுறை கூட மேற்கொள்ளப்படாத நகரத்தை கட்டமைக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இயற்கை தன்நெறியினை இழக்கச்செய்கின்றவாறான எந்தவொரு அபிவிருத்தியும் நிலைபேறானது இல்லை என்பதை நாம் ஒருமித்த சிந்தனை நிலைப்பாடாக கொள்ளாத வரைக்கும் வாழ்வும், வளமும் மீள்தல் சாத்தியமற்றதாகும்.

## விவசாயப் பயிர்ச்செய்கை

ஈழத்தேசமானது தன் பாரம்பரியமான, தனக்கே உரித்தான பண்புகளை கொண்டமைந்த விவசாய நிலப்பரப்பாக உலக அரங்கில் வலம்வந்த தேசமாகும். பல்வேறு வரலாற்று இதிகாசங்களிலும் இலங்கை பெருமளவான விவசாய உற்பத்திக்கு உரித்துடைய நாடு எனக்குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இலங்கை விவசாயத்தில் தன்னிறைவான நாடாக திகழ்ந்த காலகட்டத்தில் நெல் உற்பத்திகளை மேலதிகமாக பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தததற்கான சான்றுகளும் காணப்படுகின்றன.எமது பாரம்பரிய வழக்காற்று மொழியொன்றில் கூறப்படுவது "உழவன் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்கமுடியும்". அதாவது இன்றும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரிய பதவிகளலும், வாணிபங்களிலும் உச்சம் பெற்ற திகழும் எம்மவர்களில் பலரது அத்திவார வாழ்வியலை ஆராய்ந்தால் விவசாயம் சார்ந்த வாழ்வியல் குடிகளாகவே இருப்பர். எமது சமூகத்தில் இன்றும் விவசாயத்துக்கும் விவசாயிகளுக்கும் என்று தனியான கௌரவம் வழங்கப்படுகின்றமை எம் வாழ்வியல் பெரும்வழியின் சான்றே ஆகும். இதையே வள்ளுவப்பெருமானார் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்" எனக்குறிப்பிடுகின்றார். அதாவது உழவு செய்து அதனால் கிடைத்ததை கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரை தொழுது உண்டு பின்செல்கின்றவரே என பொருள் அமைக்கப்படும். எம் சூழலியல்சார் செய்கை என்பது ஓர் பரவலான ஆராய்ந்து அணுக வேண்டிய பரப்பாகும். இத்துறை வெறுமனையே பயிர்களோடு மட்டும் நின்றுவிடாத ஓர் ஒருங்கிணைந்த வாழ்வியல் முயற்சியாகும். அதாவது தத்தமது குடும்பமாக வயல்களிலும்,



தோட்டங்களிலும் அயராது உழைத்து பயன்பெற்று பிறருக்கும் பயன்வழங்குகின்ற நடைமுறைசார் செயன்முறையாகும். தற்போதைய சிறுவர்களில் பெரும்பாலானோரின் வாழ்வியல் நகரமயமாதல் கோலங்களினால் முற்றாக மாற்றமான நவீன நடைமுறைகளை கொண்டிருக்கின்றன.

ஆனால் எம்முன்னைய சந்ததியினரில் பெரும்பாலானோர், அதிகாலையில் எழுந்து வயல்களிலும், தோட்டங்களிலும் பணி செய்துவிட்டு, பாடசாலை சென்று மீண்டும் வந்து உழைத்து கற்று தத்தமது வாழ்க்கையினை ஸ்திரப்படுத்தியவர்களே ஆவர். எமது காலமும், தேசமும், வாழ்வியலும், பண்பாடும் கல்வியின் தேவையினை வலியுறுத்தி நின்றாலும், அவற்றை கற்று தேர்கின்ற அதேவேளை எமது பாரம்பரிய விவசாயத்தை கைவிடல் சாலச்சிறந்தது அல்ல. மிகவும் தன்னிறைவான



நிலைபேறான வாழ்க்கை கோலத்தை கொண்ட ஓர் உயர்சமூகமாக இருந்த நாம், அன்று அதிகாலை எழுந்து பசுவில் தூயபால் கறவை செய்து பருகினோம், பின்னர் அதே பசு இடும் நாகு கன்றுகளை விவசாயத்தேவைகளுக்கு பயன்படுத்தினோம். அவை இடும் கழிவை பசளையாக்கினோம். ஆனால் இன்று எம்மில் பலர் அதிகாலை எழுந்து நீர்கலந்த பாலை கொள்வனவு செய்யவென வரிசையில் நிற்கின்ற வேடிக்கை வாழ்வியலுக்கு ஆட்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்மவர்களின் வாழ்வியலோடு இரண்டென கலப்புற்ற ஓர் துறையே விவசாயமாகும். நாம் எவ்வளவு தூரம் வேலைப்பளுவான, இயந்திரமயமான வாழ்வியலில் இயங்கி கொண்டிருந்தாலும் இயன்றளவு விவசாயம் சார்ந்தும் சிறிதளவு நேரத்தை செலவளித்து எமது பங்களிப்பை வழங்குதல் அவசியமானதாகும். இதற்கு சிறந்த உதாரணமாக நாம் வாழும் சூழலிலாவது வீட்டுத்தோட்டமொன்றை அமைத்துக்கொள்ள முடியும். இதனூடாக பல்வேறு வகையான ஓராண்டு, ஈராண்டு, பல்லாண்டு பயிர்களை செய்கை செய்து, தத்தமது தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடிவதுடன், வருமானம் ஈட்டும் துறையாகவும் மாற்றிக்கொள்ள முடியும். எமக்கு போதிய நிலவசதி இல்லை, அடுக்குமாடி குடியிருப்புகளில் இருக்கின்றோம் என்றவாறான முன்மொழிவுகளோடு வருபவர்கள். பல மாற்றுச்செய்கை நுட்பங்களை கையாள முடியும். சிறிய வரையறுக்கப்பட்ட நிலப்பகுதிகளில் தானியங்களை விதைப்பு செய்ய முடியும். விவசாயச்செய்கையின் அடிப்படைக்காரணிகளில் ஒன்றான மண் இல்லாமலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் அளவுக்கு தொழில்நுட்பம் எங்களை துக்கி நிறுத்தியிருக்கின்றது.அவற்றுக்கு எடுத்துகாட்டாக காற்றில் பயிர்செய்தல், திரவ ஊடகப்பயிர்ச்செய்கை போன்ற பல மண்ணின்றிய பயிர்ச்செய்கை நுட்பங்களை குறிப்பிட முடியும்.

நாம் விவசாயத்தை அடியாக கொண்டு வளர்ந்த பாரம்பரிய இனமாகவும், உயர் நாகரிகப் பின்பற்றுதலின் தொடர்ச்சியான இனமாகவும் காணப்படுவதற்கு எமது முன்னோர்களால் நாம் இன்று அனுபவிக்கும் எந்தவித நவீன தொழில்நுட்ப வசதிகளும் இல்லாமல் மேற்கொள்ளப்பட்ட விவசாயம்சார் செய்கை முறைகளும் சான்று சமைக்கின்றன.இன்று வித்துவங்கிகள் என்ற பெயரில் அரசாங்கமும், பல தனியார் அமைப்புகளும் பரம்பரையியல் மாற்றங்களை மேற்கொண்டு தாங்குதிறன்

குறைந்த உயர்விளைச்சல் கொண்ட பயிரின வித்துகளை சேமித்தும், விநியோகித்தும் வருகின்றன. இதனால் எமது பல பயிரினங்கள் அரிதாகி இல்லாமலே போய்விட்டன. வெளிநாட்டவர்கள் எமது பாரம்பரியப் பயிரினங்களின் பரம்பரையலகுகளைத் திருடிச்சென்று மீண்டும் எமக்கே பணத்துக்கு விற்பனை செய்கின்றனர். இவ்வாறாக வணிக இலாபநோக்கில் அறிமுகம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்ற விதையினங்கள் இலகுவாக நோய்த்தொற்றுக்கு ஆளாகக்கூடிய தன்னார்வ இயல்புகளை கொண்டிருப்பதால் இலகுவாக பீடைத்தொற்று ஏற்படுகின்றது. இதன் காரணமாக அண்டைநாட்டு, தேசிய மற்றும் தனியார்நிறுவனங்களிடம் பணம் கொடுத்து பீடைநாசினிகளையும், களை நாசினிகளையும் கொள்வனவு செய்கிறோம். நகரமயமாதல், மண்ணரிப்பு மற்றும் இதர சூழலியல்சார் நெருக்கடிகளால் விவசாய நிலப்பரப்பு குறைவடைவதோடு, சனத்தொகையினுடைய அபரிதமான அதிகரிப்பும் அலகுபரப்பில் உற்பத்தியினுடைய அளவினை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலைக்கு விவசாயிகளையும், விவசாய உற்பத்தி அமைப்புகளையும் உந்துதல்படுத்தகின்றன. இதன் காரணமாகவே புதிய வகையான பரம்பரையியல் மாற்றங்களுக்குள்ளான தாங்குதிறன் குறைந்த, மீஉற்பத்திதிறன் கொண்ட உள்ளீடுகள் அறிமுகம் செய்யப்படுகின்றன. இவற்றை ஊக்குவிக்கவென இரசாயன உரங்களும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறன தோற்றப்பாடே பசுமைப்புரட்சி என உருவானமையின் அடிப்படையென்பது



குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக புதிதாக புதிகாக அறிமுகம் செய்யப்படுகின்ற விதை உள்ளீடுகளில் பெரும்பாலானவை மலட்டு இனங்களாகவே காணப்படுகான்றன. அதாவது பன்னாட்டு நிறுவனங்கள் தமது பொருளாதார இலாபமீட்டும் நோக்கை அடிப்படையாகக்கொண்டு அறிமுகம் செய்யப்படும் உள்ளீடுகள் மறுமுறை பயன்பாட்டிற்குரிய முளைதிறனுள்ள விதையினங்களை உருவாக்ககூடிய வல்லமை உள்ளனவாக இருப்பதில்லை. இதனால் மீண்டும் விவசாயி பணம் செலுத்தி புதிய விதை உள்ளீடுகளை பெற வேண்டி ஏற்படுகின்றது. பண்டைய காலங்களில் எம்முன்னோர்களால் பல்வேறு தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டு விதையினங்கள் இயற்கையாக நீண்டகாலப்பகுதிக்கு பேணப்பட்டும், பயிரிடப்பட்டும் வந்தன. அன்றைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய பயிரினங்கள் அதிகளவு தாங்குதிறன் கொண்டவையாக இருந்ததனால் அவை பீடைத்தொற்றுக்கு உள்ளாகும் நிகழ்தகவு குறைவாகவே காணப்பட்டன. அவ்வாறு பீடைத்தொற்று மற்றும் நோயியல் தாக்கங்களுக்கு பயிர்கள் உள்ளாகும் பட்சத்தில் பல்வேறு இயற்கைவழியான நிவாரணிகள் பயன்படுத்தப்பட்டன.

ஆராய்வோம்...

த.விதுர்ஷன்,
மாணவன்,
கொழும்பு பல்கலைக்கழகம்.

இயற்கைத் தாவரங்களும் வீட்டுத்தோட்ட பயன்தரு மரங்களும்

இயற்கைச் செடிகள், கொடிகள், புல், பூண்டுகள் என்பன மிகப் பரவலாக உயர் பல்வகைமையை இப் பிரதேசத்தில் காட்டுகின்றன. யlternanthera thera (பொன்னாங்காணி), Centella asiatica (வல்லாரை), Amaranthus spinosus (முள்ளுக்கீரை), Amaranthus viridis (குப்பைக்கீரை), Aerua lanata (தேங்காய்ப்பூக்கீரை), Portulaca oleracea (நீலப்பசளி) என்பன கிராமத்தவர்களின் உணவுத்தேவைக்குப் பயன்படும் சில தாவரங்களாகும். சில தாவரங்கள் மருத்துவத் தேவைக்கும் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றில் Solanum nigram (மணித்தக்காளி): இதன் அரைத்த சாறானது குடற் புண்களை ஆற்றுவதற்கும் குடலின் அமிலத்தன்மையை நீக்குவதற்கும் பயன் படுவதுடன் Cyperus rotundus (கோரை)ப் புற்களின் உலர்ந்த விதைக் கிழங்குகளை அரைத்து கொதிநீரில் அவித்து அந்நீரை பருகுவதன் மூலம் காய்ச்சலை குறைக்க முடியும் எனவும் கூறப்படுகின்றது. Phytlanthus niruri (கீழ்காய் நெல்லி) யானது சிறுநீரகம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு தரக்கூடியது எனவும் Acalypha indica (குப்பை மேனி) யானது சொறி, சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு அரைத்துப் பூசுவதற்கு படுத்தப்பட்டு வருகின்றன. Tribulus terrestris (நெருஞ்சி) வித்துக்களை அரைத்துப் பெறப்படும் சாறு உடனடிக் காயத்தில் இருந்து வரும் இரத்தக்கசிவைக் கட்டுப்படுத்தும் எனவும் மேற்கூறியவற்றை தாம்



12

T.K.மதி

# வழுக்கியாறு

## சூழற்றொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

பொதுவாக பயன் படுத்துவதாகவும் கிராமத்து முதியவர்கள் கூறுகின்றனர். இவற்றை விட இன்னும் பல இயற்கைத் தாவரங்களும் மருத்துவத் தேவைக்குப் பயன்படுகின்றன.

இது போன்று இயற்கைத் தாவரங்களை பயன் படுத்தி நோய்களைக் குணப்படுத்தும் முறை ஆயுள்வேத சித்தமருத்துவம் என அழைக்கப்படுகின்றது இதனை மேற்கொள்ளும் மருத்துவர்கள் ஆதிகாலம் முதல் இன்று வரை "பரியாரியார்" என அழைக்கப்பட்டு வருகின்றனர் இவர்கள் பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக இத் தொழிலை செய்து வருகின்றனர். ஆங்கில மருத்துவ வருகையும் பாடவிதானம் மூலமாக பட்டம் பெற்ற சித்த மருத்துவர்கள் கிராமிய சித்த வைத்தியசாலைகளில் நியமிக்கப்பட்டமையும் பரம்பரை பரம்பரையாக மருத்துவம் செய்பவர்களின் மதிப்பை பிரதேசத்தில் குறைத்துள்ளன என்றே சொல்ல வேண்டும். Leucas aspera (தும்பை), Tephrosia purpurea (கொளிச்சி), Stachytarpheta indica (சீமைநாய்விருச்சி), Achyranthes aspera (நாயுருவி), Lippia nodiflora (பொடுதலை), Mimosa pudica (தொட்டாற்சுருங்கி), Vernonia cinereal (சீர்தேவியார் செங்கழுநீர்), Tridax procumbens (மூக்குத்திப்பூண்டு), Ageratum conyzoides (பூம்புல்லு), Mikania scandens (பால்க்கொடி), Euphorbia hirta (பாலாவி), Euphorbia thymifolia (சித்திரப்பாலாவி) போன்றவை இன்னும் சில

இயற்கைப் பூண்டுகளுக்கு உதாரணங்களாகும் இவை பெரும்பாலும் விலங்குகளின் உணவாக பயன்படுவதுடன் மருத்துவத் தேவைக்கும் மண்ணரிப்பைத் தடுக்கும் மற்றும் நிலத்தில் இருந்து நீரிழப்பை குறைக்கும் மூடுபடைகளாகவும் அமைகின்றன.

தாமரைக் கிழங்குகள் கிராம மக்களின் உணவுத் தேவைக்குப் பயன் படுவதுடன் நீர் அல்லி மற்றும் தாமரைப் பூக்கள் சமய விழாக்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் தாமரை இலையானது பொது விழாக்களில் உணவு பரிமாறும் தட்டுக்களாக பயன்பாட்டில் உள்ளன. துளசியானது இப்பகுதியில் கலாசார, மருத்துவ, சமய முக்கியத்துவம் பெற்ற தாவரமாக விளங்குகின்றது. பெரும்பாலான கிராம மக்களின் வீடுகளின் முற்றத்தில் துளசிச்செடி நாட்டப்பட்டு வளர்க்கப்படுவதுடன் இந்து மக்களால் வணங்கப்பட்டும் வருகின்றது. துளசிச் செடியானது சளிச்சுரத்தை குணப்படுத்தும் மருந்தாகவும் பரவலாக பயன் படுத்தப்பட்டு வருகின்றது. அறுகம் புல்லும் இப்பகுதியில் சமய மற்றும் மருத்துவ முக்கியத்துவம் பெற்ற புல் வகையாகும்.



தாழ்நிலங்களில் காணப்படும் புல், பூண்டுகள் காட்டும் அதி பல்வகைமையானது விவசாயத்தில் பெரும் இடையூறு விளைவிப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் தாம் களைநாசினிகளைத் தெரிவு செய்வதில் தடுமாற்றங்களை அனுபவிப்பதாகவும் விவசாய நிலங்களில் களைகளைப் பிடுங்கி அகற்ற பெருமளவு பணம் செலவாவதாகவும் கூறுகின்றனர். அதே நேரம் இக் களைகளால் மண்ணின் நீர் பற்றும் திறன் அதிகரிப்பதையும் மற்றும் அக் களைகள் கால்நடைகளுக்கான உணவாக பயன் படுவதனையும் ஏற்றுக்கொள்கின்றனர். அத்துடன் களைகள் மண்ணரிப்பையும் குறைக்கின்றது. நீர் நிலைகள் கோடைகாலங்களில் வற்றும் பொழுது அப்பகுதிகள் பெருமளவு புல், பூண்டுகளைக் கொண்ட பிரதான மேய்ச்சல் தரைகளாகத் தொழிற்படுகின்றன.

கிராமத்தவர்கள் தமது வீட்டு வளவுகளில் பிரத்தியேகமாக வீட்டுத் தோட்டங்களை அமைத்து பராமரித்து வருகின்றனர். இவ் வீட்டுத்தோட்டங்களில் பூமரங்கள், மற்றும் பல்லாண்டுத் தாவரங்களான மா, பலா, வாழை, தேசி, தென்னை, பப்பாசி போன்ற மரங்கள் வளர்க்கப்படுகின்றன. அத்துடன் வெற்றிலை, மிளகாய், வெண்டி, பயிற்றை, கத்தரி மற்றும் தக்காளி போன்ற தாவரங்களையும் சிறிய அளவில் பயிரிட்டு பராமரித்து வருகின்றனர். பூக்கும், பூக்காத தாவரங்கள் இயற்கை அழகை உண்டு பண்ணுவதில் பிரதான பங்கு வகிக்கின்றன. பூமரங்களில் பூக்கும் பூக்கள் சமய, கலாச்சார விழாக்களில் பயன் படுத்தப்படுகின்றன. கோயில்களுக்கு பூக்களை பறித்து மாலை கட்டிக்கொடுத்தல் மற்றும் கோயில் தொடர்பான சேவையாற்றுதல் என்பவற்றை சில சமுதாய மக்கள் தமது வாழ்வாதாரமாகக் கொள்கின்றனர். செம்பருத்தி, நித்தியகல்யாணி போன்ற தாவரங்கள் பெரும்பாலான வீட்டுத்தோட்டங்களில் பொதுவாகக்

காணப்படும் பூமரங்களாகும்.
பாதீனியம் (Parthenium hysterophorus) எனும் ஒரு வகைக் களையானது தற்போது இப்பிரதேசத்தில் ஆக்கிரமிப்புக்களையாக உருவெடுத்துள்ளது. இப் பாதீனியமானது இந்தியாவில் இருந்து போர்காலத்தில் வந்த இந்திய அமைதிப்படையின் வருகையுடன் யாழ் குடாநாட்டுப் பகுதியில் பரவியதாக சொல்லப்படுகின்றது. இக் களையானது



மண்ணை வளம் குன்றச்செய்வதுடன் நச்சுத்தன்மை மிகுந்த செடியாகும் இது மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஒவ்வாமையை ஏற்படுத்துவதுடன் இவற்றின் வித்துக்கள் சுவாச நோய்களுக்கும் வழிவகுக்கும் என கூறப்படுகின்றது. இதனால் இயற்கைச் சமநிலை குழப்பமடையும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது. எனவே இக்களையை இயன்றளவு இப்பிரதேசத்தில் இருந்து அகற்ற வேண்டும் என பல திட்டங்கள் தன்னார்வ தொண்டர் அமைப்புக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் வடக்கு மாகாண சபை என்பவற்றால் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று(2020) வடக்கு மாகாண சபை கலைக்கப்பட்டுள்ள நிலையில் பாதீனியம் ஒழிப்பு செயற்பாடும் அசமந்தப் போக்காக காணப்படுகின்றமை கவலைக்குரிய விடயமாகும்.

(ஆறு ஓடும்)

## தூமியின் அறப்பணிகள்

நல்லோர் இணைவால், நம் இளையவர்களுக்கு இருசக்கரவண்டிகள் தூமியால் வழங்கப்பட்டன!
கனடாவில் வதியும், செல்வன்.அரிசன் மற்றும் செல்வி.அவலினா ஆகியோரின் நிதியில் இரு மாணவர்களுக்கும்,
சிங்கை தேசத்து உறவுகள், திரு. அருள் ஒஸ்வின், திரு. சுந்தர் ஆகியோரின் நிதியில் இரு மாணவர்களுக்கும், லண்டன் குறோளி தமிழ் கல்விக்கூடத்தின் நிர்வாகி, திரு. சீலன் அவர்களின் நிதியில் ஒரு மாணவருக்கும், லண்டன், திருமதி.குமுதினி வாகீசன், பிரான்ஸ் தேசத்தில் வதியும் திரு.வி.கோகுலராம் அவர்களின் நிதியில் ஒரு மாணவருக்குமாக, ஆறு துவிச்சக்கர வண்டிகள், கிளிநொச்சி, ஜெயபுரம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு, பாடசாலை, அதிபரின் வழிகாட்டலினூடாக வழங்கிவைக்கப்பட்டன!
பாடசாலைக்கு மிக நீண்ட தூரத்தில் இருந்து நடந்து வந்து கல்வியைத்தொடரும் பிள்ளைகள் இனி விரைந்து சிரமமின்றி கல்வியைத்தொடர்வார்கள்!
"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."








இன்னைய தேதிக்கு சமூக வலைத்தளங்களில் எந்த மூலைக்கு திரும்பினாலும் கண்ணு முன்னாடி வந்து நிக்கிற ஒரே Template Ostrich தெரியுமா? என்டது தான். அந்தளவுக்கு விஜய் சேதுபதி சொன்ன விசயம் Trend ஆகிப்போச்சு. மறுபக்கத்திற்காக துப்பு துலக்குவம் என்டுப்பார்த்தா அங்கயும் இந்த தீக்கோழி கண்ணு முன்னாடி வந்து நிக்க சரி இந்த தடவை இதுட
மறுபக்கத்தையே
எழுதுவம்னு ஆரம்பிச்சதுதான் இந்த கட்டுரை.



பறவை இனத்திலயே ரொம்ப பெரிசு இதுதான்னு கேள்விப்பட்டிருப்பம் அதென்னவோ வாஸ்தவம் தான் ஆனா Size மட்டுமில்ல பறவைகளிலேயே ஆயுசு கூடினதும் இது தான். சுமார் முப்பது வருஷம் உயிர் வாழும்னா பாருங்களேன். 80 தொடக்கம் 90 கிலோ எடை இருந்தாலும் சுமார் 50-65 கி.மீ வேகத்தில நடக்குமாம். பேசாமா உலகத்தின் சிறந்த நடையாளர் விருதை தீக்கோழிக்கு கொடுக்க பரிந்துரைச் செய்யலாம்.

அதென்ன நெருப்புக்கோழினு பேரு நம்ம முன்னோர்கள் சொன்ன மாறி நெருப்பை விரும்பி உண்ணுமானுக் கேட்டா கண்டிப்பா இல்லை. இது விரும்பி உண்ணுறதே தானிய வகைகள் தான். “அப்பிடி என்ன பொல்லாத வலி ?” னு நீங்க அடுத்த கேள்வி கேக்கலாம். விஜய் சேதுபதி கொடுக்கிற பில்டப்புக்கு WorthM என்டு கேட்டா பதில் கண்டிப்பா “அதுக்கும் மேல ” என்டது தான்.

சுமார் குறைந்தபட்சம் 2 கிலோ Weightஉ. 15 தொடக்கம் 20 செ மீ வரை அகலம் சாதாரண கோழி முட்டையோட ஒப்பிடக்குல 20 மடங்கு பெரிசுனு வைங்க. விஜய் சேதுபதி சொன்ன வலிக்கு அர்த்தம் உங்களுக்கே இப்ப புரிஞ்சிருக்கும். தமிழர்கள் எப்படி மாட்டை வண்டில பூட்டி பந்தயம் நடாத்துவாங்களோ அதைப்போல தீக்கோழிய வண்டில பூட்டி பந்தய ரேஸ் ஓடுறதும் நடந்துக்கொண்டுத்தான் இருக்கு. “சும்மா கதை விடாதா” என்டு நீங்க கேக்கலாம் ஆனா தீக்கோழிகள் அதிகமா வசிக்கிற தென் ஆபிரிக்கால இது கண்கூடு.

பாலைவனத்தில ஒட்டகம் செய்யக்கூடிய எல்லா கூத்தையும் இந்த தீக்கோழிங்க மணற்பரப்புல செய்யக்கூடியவை அதால இதுகளுக்கு “ஒட்டகப்பறவை” என்ட இன்னொரு பேரும் இருக்கு. மனுசங்கள்ட்ட சமத்துவம் இருக்குதோ இல்லையோ நெருப்புக்கோழிங்க கிட்ட தாராளமாவே இருக்கு. பகல் நேரத்தில பெண்கோழியும் இரவு நேரத்துல ஆண்கோழியும் Shift மாத்தி மாத்தி முட்டைய அடைகாக்கும். அதுவும் சும்மா இல்லை முட்டைய மண்ணுக்குள்ள மறைச்சு எஞ்சினியர் மாறி அதச் சுத்தி கல்லால கட்டடம் எழுப்பி அடைக்காக்கும்னா பாருங்க.

முட்டைல இருந்து 40-42 நாளில குஞ்சுகள் வெளிய வந்திடும். இதுவரைக்கும் உலகமெங்கும் 20 லட்சம் நெருப்புக்கோழிகள் உயிர்வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளது. நாய மாறியே “என்ன நன்றியுள்ள ஜிவனா?” என்டு

நீங்க கேக்கலாம் ஆனா விஷயம் அது இல்ல . நெருப்புக்கோழிக்கும் நாய மாறி மோப்ப சக்தி ரொம்ப அதிகம். அதுட முட்டையை தொட்டிங்க உங்க வாழ்க்கை கெட்டிச்சு.

இந்த நெருப்புக்கோழி தற்காப்புக்காக தலைய மட்டும் மண்ணுக்குள்ள புதைச்சிட்டு நிக்குமாம். "எது இதுவா பாதுகாப்பு"என்ட உங்கட மைண்ட் வாய்ஸ் விளங்குது. நம்ம சனத்திலயும் சிலபேர் (நெருப்புக்கோழி மண்ணில தலை மட்டுமே புதைத்துக் கொண்டு முழுதும் மறைந்து கொண்டது போல் )பிறரை முட்டாள் (ஏமாற்றியதாக) ஆக்கியதாக மனசில நினைச்சுக்கொள்ளுறது இல்லயா அது மாறித்தான்னு வச்சுக்கொள்ளுங்க

இனிமே யாராச்சும் நக்கலா கூடி Ostrich தெரியுமா? என்டு கேட்டா இந்த கதைகள அளந்து விடுங்க ஓடிருவாங்க

## ஜீவாவின் நினைவுகள்...

மல்லிகை மாத இதழ், தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த ஜோசப்சலூன் என்ற சிகையலங்கார நிலையத்திலிருந்து வெளியாகி பின்னர், மானிப்பாய் விதிக்கும் கே.கே.எஸ். வீதிக்கும் இடையில் ( ராஜா தியேட்டருக்கு பின்புறமாகச்சென்ற) சிறிய ஒழுங்கையிலிருந்த சிறு கட்டிடத்தில் அமைந்த மல்லிகைக்கான பிரத்தியேக அலுவலகத்திலிருந்து வெளியானது.
மல்லிகை முதலாவது இதழ் 1966 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வெளியானபோது அதன் விலை 30 சதம்தான் என்பதை அறியும்போது ஆச்சரியம்தான். ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் ஒரு காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த மல்லிகையும் எமது மக்களைப்போன்று வடக்கில் உருவான அசாதாரண சூழ்நிலைகளையடுத்து கொழும்பில் கதிரேசன் வீதிக்கு இடம்பெயர்ந்து, இறுதியில் அங்கிருந்தே சில வருடங்களுக்கு முன்னர் தனது ஆயுளையும் நிறைவுசெய்துகொண்டது.
ஒரு சிகையலங்காரத்தொழிலாளியாக வாழ்ந்து, பொதுவுடைமைக்கருத்துக்களினால் ஈர்க்கப்பட்டு, அரசியல்வாதியாகிவிடாமல், இலக்கியவாதியாக தன்னை வளர்த்துக்கொண்டவர் ஜீவா. சிறுகதை எழுதிக்கொண்டிருந்தவர் எவ்வாறு ஒரு இலக்கிய இதழை துணிந்து நடத்த முன்வந்தார் என்ற கதையை தனது சுயசரிதையிலும் விபரித்திருக்கிறார். இந்தச்சரிதை ஆங்கிலத்திலும் வெளியாகியிருக்கிறது.
முழுநேர எழுத்தாளராக ஈழத்து இலக்கிய உலகில் அறிமுகமான ஜீவா, இதழாசிரியராகவே தனது வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவர். போர் நெருக்கடி மிக்க, மின்சாரம் தடைப்பட்டிருந்த காலப்பகுதியிலும் அச்சுத்தாளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிய சூழலிலும் யாழ்ப்பாணத்திலிருந்து மல்லிகை வெளியானது. அப்பியாசக்கொப்பித்தாளிலும் மல்லிகை அச்சாகியதை மறந்துவிடமுடியாது.



ஆயினும் அன்றைய அசாதாரண சூழ்நிலைகளோ-காகிதத்தட்டுப்பாடோ - வாழ்வாதார நெருக்கடியோ இல்லாத இந்த கணினி யுகத்திலும் கொழும்பிலிருந்து வெளியான மல்லிகை, அதன் ஆசிரியராலேயே நிறுத்தப்பட்டதும் ஈழத்து இலக்கிய உலகில் மறக்கமுடியாத செய்தியாகும்.

எழுத்தாளர் முருகபூபதி

யலசமாதி

ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 18

மழை ஓய்ந்த அனுராதபுரத்தைத் திடீர் திருப்பங்கள் சூழ்ந்திருந்தது! எப்போது என்ன நடக்கும் என்பது எப்போதுமே மர்மங்கள் நிறைந்ததாகவே காணப்பட்டது! அப்படி ஒரு நிகழ்வுதான் ஆற்றங்கரையில் முகலன் மகாநாமரைச் சந்தித்ததும், ஓடிய வீரன் ஒருவன்

“அந்தோ மன்னர்....”

என்று அலறியதும்!

அந்த வீரன் காட்டிய திசையில் தாதுசேனரின் உடல் ஒரு மரத்துண்டில் சிக்குண்டு வேகமாய் ஓடும் ஆற்றின் வேகத்தோடு இழுத்துவந்ததை எல்லோரும் பார்த்து விறைத்துப்போய் நின்றனர்...

“ஐயோ அப்பா...”

என்று அலறியபடி முகலன், தாதுசேனரின் உடலத்தோடு மிதந்து வந்த மரத்தை நோக்கி ஓடினான்... ஆறு ஓடிய வேகத்தில் முகலனால் தந்தையின் உடலத்தை மீட்க இயலாது என்று அறிந்த வீரர்களின் தலைவன் முகலனைத் தடுத்து தன்னோடு அணைத்துக் கொண்டான். முகலனோ சிறு பிள்ளையைப்போல் விக்கி விக்கி அழத்தொடங்கினான்...

“இளவரசே ....”

என்ற மகாநாமரின் குரல் தூரத்தே கேட்டது! நீரோட்டத்தில் இழுத்துச் செல்லப்பட்ட தாதுசேனரின் உடலம் இப்போது ஆற்றைக் கடந்துகொண்டிருந்த மகாநாமரைத்தாண்டிப் போனது! மகாநாமர் கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது... தன் உயிருக்கு மேலாக எண்ணி வளர்த்த மருமகனை இந்த நிலையில் கண்டதால் சொல்லொணா துயரில் மூழ்கிப் போனார்!

அந்த திசையை ஏக்கத்தோடும், விரக்தியோடும் அளவுகடந்த சோகத்தோடும் முகலனும் பார்த்தபடி நின்றான்!


கலாவாவியின் நீரோட்டத்தில் தன்னை நிலைப்படுத்தி மகாநாமரின் யானை கரையேறியிருந்தது! தன் கால்களைப் பதித்து மெல்ல மகாநாமரை தரையில் இறக்கியது...



முகலன் ஓடிச்சென்று அவரை இறுக அணைத்துக்கொண்டு சத்தமிட்டு அழுதான்!
“அன்பனே...ஆறுதல் கொள்! என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்து அறிகின்றேன்! இறைவன் ஏதோ பெரும் பணியை மீள என்னிடம் ஒப்படைத்திருக்கின்றான் போல.. உன் கவலைக்கும் என் கவலைக்கும், இடையில் ஒரு நாட்டின் எதிர்காலம் இருக்கிறது என்பதை அறிந்து கொள்! தாதுசேனனை எண்ணிக்கலங்காதே... எந்த நாடு சிறக்க வேண்டும் என்று கலாவாவியை கட்டினானோ அந்த நாட்டிற்காக அந்த கலாவாவியின் மடியிலேயே தன்னை புதைத்துக்கொண்டான்! யலசமாதியாகி கலாவாவியோடு கலந்து வரலாற்றில் நிலைப்பான்! வஞ்சகர்களும், துரோகிகளும் அந்த வரலாற்றில் இருந்து வெறுக்கப்படுவார்கள்! மகனே... ஆறுதல் கொள்!”

முகாலனை அணைத்தபடி அவன் உச்சிமோர்ந்து சொன்னார் மகாநாமர்.

“தாத்தா... உங்கள் சமாதானத்தை என் மனம் ஏற்க மறுக்கிறது... கவலையும் இந்த வாழ்வின் மீது வெறுப்பும் என்னைச் சூழ்ந்து கொள்கிறது... இந்த நாட்டையும் இந்த மக்களையும் நேசித்த என் தந்தையின் இறுதி நேரம் எப்படி அமைந்ததோ... தெரியாது... ஆனால்



இறந்த பின்னர்கூட தக்க மரியாதை எதையும் என்னால் செய்ய இயலவில்லையே... இந்தக் கொடுமைக்கு காரணமான துரோகிகளைக் கொன்றொழித்தாலொழிய என் கோவமும் சோகமும் தீராது....”

என்றவன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு அருகில் நின்ற வீரனின் குத்துவாளை பிடுங்கிக்கொண்டான்... மகாநாமர் அவன் கைகளைப் பற்றித் தடுத்து அந்த குத்துவாளைப் பறித்து மண்ணில் எறிந்தார்...

“முகலா ... கத்தியைக்காட்டிலும் புத்தியை பயன்படுத்துவதே இந்த நேரத்தில் மிக அவசியம்... தன் தந்தையையே கொன்ற பாதகன் காசியப்பன் எந்த கொடுமையையும் செய்யத் துணிவான் ...பலத்த பாதுகாப்போடும் திட்டங்களோடும் தயாராக இருப்பான்... அவன் ஏவல் செய்ய படையும் தயாராக இருக்கும்! காலம் நம் பக்கம் சாயும் வரைக் காத்திருப்போம்! எதிர்காலத்திட்டங்களை அதுவரை செப்பனிடுவோம்!”

கலங்கி நின்ற முகலனுக்கு மகாநாமரின் வார்த்தைகள் உரமளித்தது... கீழே பணிந்து அவர் கால்களைப்பற்றிக்கொண்டான்!

“எழுந்திரு முகலா... கலாவாவியிலே தன்னைக் கரைத்துக்கொண்ட உன் தந்தைக்காக போதிமாதவனிடத்திலே வேண்டுதல் செய்வோம்!”

என்றவர் அவனைப் பற்றி எழுப்பினார்...
குன்றின் இடுக்கில் வளர்ந்திருந்த காட்டுக்கொடியில் மலர்ந்து பெய்த கடும் மழையில் தப்பியிருந்த கொடிமலர்களைப் பறித்துவந்து ஆற்றில் போட்டனர்...


அடுத்து என்ன செய்வது எங்கே செல்வது என்று தெரியாமல் வீரர்கள் சிலர் முணுமுணுத்தனர்... காசியப்பன் தம்மைக்கொல்ல வீரர்களை அனுப்பக்கூடும் என்றபயம் அவர்களை மெல்ல மெல்ல சூழத்தொடங்கியது...

மகாநாமர் வழிகாட்டுவார் என்ற ஒற்றை நம்பிக்கையைத்தவிர அவர்களிடத்தில் வேறெதுவும் இருப்பில் இல்லை...!

*வழிகாட்டுவார்...*

# நமோ நமோ மாதா !

யோ. நிவேதன் ( தமிழ் )



சுதந்திர இலங்கை தனது 73வது சுதந்திரதினத்தை காண ஆயுத்தமாக உள்ளது. சென்ற சுதந்திரதினத்தில் தமிழில் தேசியகீதம் பாடப்படவில்லை, சரி இந்த முறையாவது பாடப்படுமா? என்று இந்த சுதந்திர தினமும் தேசியகீதமும் அன்றிலிருந்து இன்றுவரை ஒரு சர்ச்சைக்குரிய ஒரு விடயமாகவே காணப்படுகின்றது.

இலங்கையின் தேசியகீதம் என்பது ஆரம்பம் முதலே பல சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆரம்பத்தில் 1948ம் ஆண்டு சுதந்திரதினத்தில் “சிறீலங்கா மாதா” என்ற வேறு ஒரு தேசியகீதமே பாடப்பட்டது. பின் அதன்தெரிவில் பக்கச்சார்ப்பு காணப்பட்டது என்று குற்றம்சாட்டப்பட்டு அது நீக்கப்பட்டது. அதன் பின்னரே இன்றுவரை வழக்கத்திலுள்ள தேசியகீதம் தெரிவுசெய்யப்பட்டது. இந்த தேசியகீதத்திற்குப் பின்னாலும் ஒரு சர்ச்சைக்குரிய வரலாறு உண்டு. அது எம்மில் பலருக்கு தெரியாது.

> **இலங்கை தேசியகீதத்தை எழுதியவர் யார்?**
> **என்று கேட்டால் ஆனந்தசமரக்கோன் என்று தரம் ஐந்து படிக்கும் பிள்ளைகூட சொல்லிவிடும். ஆனால் அதற்குப் பின்னால் திருவிளையாடல் திரைப்படத்தில் வரும் “பாடலை ஒருவர் எழுத, இன்னொருவர் பாடி பரிசு பெற்ற கதை”**
> **போன்ற ஒரு நிகழ்வு காணப்படுகின்றது.**

இந்தியாவினதும், பங்களாதேசினதும் தேசிய கீதங்களை இயற்றிய ரவீந்திரநாத் தாகூரிடம் இலங்கையைச் சேர்ந்த ஆனந்த சமரக்கோன் மாணவராக இருந்தார். அவர் 1939ல் இலங்கை திரும்பினார். இங்கே கல்லூரி ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றினார். “ரவீந்திரநாத் தாகூரின் மாணவர்” என்ற பெருமையை அறிந்த கல்லூரி அதிபர் சமரக்கோனிடம் இலங்கையின் பெருமைகளை வெளிப்படுத்தும் ஒரு தேசபக்தி பாடல் ஒன்று எழுதித்தரும்படி கேட்டார்.



இந்த விடயத்தை தன் ஆசானான தாகூரிடம் தெரிவிக்க தாகூர் வங்க மொழியிலே ஒரு பாடல் ஒன்றை எழுதிக் கொடுத்தார். அதை சிங்கள மொழிபெயர்த்த சமரக்கோன் அதனை கல்லூரி அதிபரிடம் கொடுத்தார். அதிபரும் அந்தப்பாடலை சமரக்கோன் மூலம் இசையமைத்து பொது நிகழ்வுகளில் பாடவைத்தார். இந்தப்பாடல் பிற்காலத்தில் தேசியகீதமாக மாற்றப்படும் என்று அப்போது எவரும் நினைத்திருக்கவில்லை. இப்பாடல் சுதந்திரமடைவதற்கு 10 ஆண்டுகளிற்கு முன்பே இயற்றப்பட்டுவிட்டது. அத்துடன் இலங்கை தேசியகீதத்தை எழுதியவர் ரவீந்திரநாத் தாகூர் என்பதே உண்மை.

1949 முதல் தாகூர் எழுதி சமரக்கோன் சிங்களத்தில் மொழிபெயர்த்த “நமோ நமோ மாதா” என்று தொடங்கும் பாடல் தேசியகீதமாகப் பாடப்பட்டது. இந்தப்பாடல் தேசியகீதமாகப் பாடப்பட்டு வந்த காலப்பகுதியில் இலங்கையின் இரண்டு பிரதமர்கள் அகாலமரணமடைந்தனர். இதனால் இந்த தேசிய கீதத்தில் நமோ நமோ என்று தொடங்கும் வார்த்தைப் பிரயோகம் அபசகுனமானது. அதனால்தான் இலங்கையில் பல அழிவுகள் நடைபெறுகின்றது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. ஆனால் தனது ஆசிரியர் எழுதிய பாடலில் எந்தவித மாற்றங்களும் செய்யக்கூடாது என்று சமரக்கோன் தனது எதிர்ப்பை வெளியிட்டபடி இருந்தார்.

அவருடைய கருத்தை எவரும் செவிமடுக்கவில்லை. 1961ல் சமரக்கோனின் அனுமதியின்றியே “நமோ நமோ மாதா” அகற்றப்பட்டு “சிறீலங்கா மாதா” என்ற பதம் சேர்க்கப்பட்டது. இதனால் மனஉளைச்சலுக்குள்ளான சமரக்கோன் 1962 ஏப்ரல் மாதத்து நாளொன்றில் அரசாங்கம் எனது பாடலை அவமதித்துவிட்டது என்று கண்டன அறிக்கை ஒன்றை எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார். இப்படி தன்னை உருவாக்கியவரையே கடைசியில் பலிவாங்கியது தேசிய கீதம்.










# வலி சுமந்த வலி.வடக்கில் வரலாறு நிலைக்கட்டும்!

தைப்பூசத்திருநாளில்,
தமிழ் தரணி சிறக்க,
(28.01.2021) திறக்கப்பட்டுள்ளது.
கந்தபுராண ஆச்சிரமம்!

மாவைக்கந்தனின் அருட்பார்வையில்,
மயிலிட்டி மண்ணில்,
திருவாளர் மகேசன் குடும்பத்தினர் அன்பளிப்பு
செய்த இடத்தில்,
ஆதுரசாலையோடு,
கலாநிதி.ஆறு திருமுருகன் அவர்களின்
அயராத முயற்சியில், உருவாகியுள்ள
உயர் பணியைப் போற்றி
மகிழ்வோம்!








அ.திருமருகன்
மாணவன்
இலங்கை சட்டக்கல்லூரி




அரசு என்பது உலகெங்கிலும் காணப்படுவதாகும். சமூக நிறுவனங்களிலேயே அதிக வலிமை மிகுந்த அமைப்பு அரசே ஆகும்.

அரசு இயற்கையாகவே தோன்றிய ஒன்றாகும்.

**மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆவான். அவன் இயல்பாகவே அரசியல் பிராணியாகவும் ஆகிறான் என அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார்.**



அவரது கருத்துப்படி மனிதனாக இருப்பதும் ஒரு அரசின் கீழ் வாழ்வதும் ஒன்றே ஆகும்.

ஆங்கிலத்தில் State (அரசு) எனப்படும் சொல் "Status" எனப்படும் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும்.

**நிகோலோ மாக்கியவெல்லி (1469-1527) எனும் அரசியல் சிந்தனையாளர் தனது "இளவரசன்" (PRINCE) என்னும் நூலில் முதல் முறையாக "அரசு" என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்.**

அரசு என்பது மனித சங்கத்தின் உயர்மிகு வடிவமாகும். அரசு, அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக உருவானதாகும். எனவே அரசு என்பது அவசியமான ஒன்றாகும்.

அடிப்படைத் தேவைகள் நிறைவடைந்த

பின்னரும் மனிதனுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தரவே அரசு தொடர்ந்து இருந்து வருகிறது. மனிதர்களின் நோக்கங்கள், வெறுப்புகள், ஆர்வங்கள் போன்றவை அரசின் மூலமாக நிறைவேற்றப்படுகின்றன. அரசு என்பது அவசியமான நிறுவனம் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் எந்த இரு வேறு நுலாசிரியர்களும் அரசு பற்றிய ஒரே கருத்தை கொண்டிருக்கவில்லை.

உட்ரோவில்சன் (Woodrow Wilson) கருத்து ப்படி,
"அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில், சட்டத்திற்காக அமையப்பெறும் மக்கள் கூட்டமாகும் என்கிறார்."

அரிஸ்டாட்டில், அரசு என்பது "ஆனந்தமான மற்றும் கௌரவமான வாழ்க்கை அடங்கிய தன்னிறைவான வாழ்க்கையைப் பெறுவதற்காக கிராமங்களும், குடும்பங்களும் இணைந்த ஒன்றியமாகும்" எனக்

குறிப்பிடுகிறார்.ஹாலண்ட் கருத்துப்படி, "பல்வேறு மனித கூட்டங்களை ஒன்றிணைத்து, ஒரு குறிப்பிட்ட எல்லைப் பரப்பில் குடியேறி, அவர்களில் பெரும்பான்மையானவரின் கருத்துக்களை, அதனை எதிர்ப்போரையும் மீறி நிலவச் செய்வதாகும்".

இவ்வாறான அரசியல் அறிஞர்களின் விளக்கங்களின் அடிப்படையில் கீழே தரப்பட்டுள்ள கூறுகளை அரசு கொண்டிருப்பதாகக் குறிப்பிடலாம்.

## அரசின் கூறுகள்

அரசின் கூறுகளாக பின்வருவன காணப்படுகின்றன்

1.மக்கள் தொகை
2.நிலப்பகுதி
3.அரசாங்கம்
4.இறையாண்மை

## மக்கள் தொகை

மக்கள் தான் அரசை உருவாக்குகிறார்கள். மக்கள் தொகை அரசுக்கு முக்கியமான ஒன்றாகும். பண்டைய கிரேக்க சிந்தனையாளர்கள் ஓர் அரசின் மக்கள் தொகை மிகவும் சிறிதாகவும் இருத்தல் கூடாது. மிகவும் பெரியதாகவும் இருத்தல் கூடாது என்று கருதினர்.



தத்துவ ஞானி

பிளாட்டோ, ஓர் லட்சிய அரசில் 5040 குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று கருதினார்.

அரிஸ்டாட்டில் மக்கள் தொகையை துல்லியமாகச் சொல்லாமல் மிகக் குறைவாகவும் இருக்கலாகாது. அதே நேரத்தில் மிக அதிகமாகவும் இருத்தலாகாது என்றுரைத்தார்.
அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்ற வகையிலும், அதே நேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்கு ஏற்ற வகையிலும் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்றார்.

ரூஸோ என்பவர்

ஓர் லட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடைதாய் இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற சிந்தனையாளர்கள் சிறிய கிரேக்க நகர அரசுகளான ஏதென்ஸ், ஸ்பார்த்தாவை மனதில் வைத்துக் கொண்டு மக்கள் தொகை எண்ணிக்கையை வலியுறுத்தினார்கள்.

**நவீன அரசுகள் மக்கள் தொகை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன.**

உதாரணமாக எமது இலங்கையில் 2012ம்

ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 20,359, 439 மக்கள் எண்ணிக்கை உள்ளனர்.

## நிலப்பகுதி

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி இல்லாமல் அரசு இருக்காது. மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது. மேலும் மக்கள் தங்களை சமூக மற்றும் அரசியல் சம்பந்தமாக தயார்படுத்திக்கொள்ள நிலப்பகுதி தேவையாகிறது. நிலப்பகுதி என்பது அந்த நாட்டின் நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றை தன்னுள் கொண்டது.

நவீன அரசுகள் நிலப்பகுதி அளவில் வேறுபடுகின்றன. குடியுரிமைக்கு நிலப்பகுதி முக்கியமாகும். மக்கள் தொகை போல, நிலப்பகுதிக்கு அளவு கிடையாது. சிறிய மற்றும் அதிக நிலப்பகுதி உள்ள அரசுகள் உள்ளன.

“நிலப்பகுதி இறையாண்மை என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதியினுள் சுதந்திரமாகவும் வெளியிலிருந்து கட்டுப்பாடு இல்லாமல் இருப்பதையும் தற்கால அரசுமுறை வாழ்க்கை குறிக்கும்”, என பேராசிரியர் எலியட் என்பவர் கூறுகிறார்.

இலங்கையின் நிலப்பகுதி 65,610 சதுர

கிலோ மீட்டர் ஆகும்.

இந்த பத்தி தினமணியில் வெளிவந்த அரசின் கூறுகள் கட்டுரையினை தழுவி இலங்கைக்கு ஏற்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.



# பற்கள் முளைத்தலும், பராமரிப்பும்
## Teething and Dental Care

[ஆரோக்கியமான பற்கள், உங்கள் குழந்தையின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை முழுமையாக்குகின்றன.]

சஜீவன் சத்தியசீலன்,
பல்மருத்துவ பீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்




### முதலில் எப்பற்கள் முளைக்க ஆரம்பிக்கும்?

கீழ் தாடையினுள் முன் உள்ள இரண்டு பற்கள் தான் முதலில் தோன்றுபவை. இவற்றைத் தொடர்ந்து மேலே உள்ள முன் பற்கள் இரண்டு தோன்றும். பெரும்பாலான பிள்ளைகளுக்கு 2 வயதாகும்போது 20 பால் பற்களும் தோன்றி விடும்.



### எப்போது எதைக்கொண்டு பற்களை பராமரிக்கத் தொடங்க வேண்டும்?

உங்கள் குழந்தையின் பற்களைப் பராமரித்தல், உங்கள் குழந்தையின் ஈறுகளினூடாக முதற்பல் வெளியே வர ஆரம்பித்தவுடனேயே தொடங்க வேண்டும். முதலாவது பல் முளைத்தவுடனேயே பற்துரிகை கொண்டு பல்துலக்கத் தொடங்க வேண்டும்.

ஆனால் முரசுகளையும் நாக்கையும் அதற்கு முன்பிருந்தே சுத்தமான ஈரத்துணித்துண்டைப் பயன்படுத்தி துடைத்து வர வேண்டும்.

புளோரைட்டுள்ள பற்பசையைப் பயன்படுத்துவது சிறந்தது.

பற்பசையினை விழுங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## பற்தூரிகையில் பற்பசை எந்த அளவு எடுக்க வேண்டும்?

3 வயதிற்கு உட்பட்டவர்களிடற்கு குழந்தைகளிற்கு பயன்படுத்தும் ஜூனியர்(junior) தூரிகையில் ஒரு நெல் மணியளவில் பற்பசை எடுத்து பல்துலக்கி விட வேண்டும்.
3தொடக்கம் 5 வயது வரையில் குழந்தைகளிற்கு பயன்படுத்தும் ஜூனியர்(junior) தூரிகையில் ஒரு பட்டாணி அளவில் பற்பசை எடுத்து பல்துலக்கி விட வேண்டும்.

வளர்ந்தவர்களுக்கு
வயது வந்தவர்கள் பயன்படுத்தும் பற்தூரிகையின் 3/4 அளவு எடுத்துப்பயன்படுத்த வேண்டும். (படத்தில் காட்டப்பட்டுள்ளது)




எட்டு வயது வரையில் குழந்தைகளிற்கு பெற்றோர் பற்களை சுத்தம் செய்து விட வேண்டும். அதன் பின்பு கட்டாயமாக குழந்தைகள் பல் சுத்தம் செய்வதினை கண்காணிக்க வேண்டும்.

## பயன்படுத்தும் பற்தூரிகை எவ்வாறு இருக்க வேண்டும்?

10 வயது வரை குழந்தைகளிற்கு உரிய ஜூனியர் பிரஷ் பயன்படுத்தல் வேண்டும். (குழந்தையின் வாயின் அளவினை பொறுத்து ஜூனியர் பிரஷ் பயன்படுத்தும் வயது எல்லை மாறுபடும்)

பல் துலக்கு வதற்கு பயன்படுத்தும் பற்தூரிகை மென்மையானதாக [Soft Bristles] இருக்க வேண்டும். கடினமான பற்துரிகைகளைப் பயன்படுத்துவது பற்களின் ஈறுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.




குறைந்த பட்சம் 2 தொடக்கம் 3 நிமிடங்கள் வரையிலேனும் பல்துலக்குதல் வேண்டும்.



புதிய உத்வேகத்தோடு அணிக்கு திரும்பிய மெஸ்ஸிக்கு right flank position வழங்கப்படுகிறது. அந்த ஆண்டின் பருவகால உதைபந்தாட்ட சீசனில் esponyal அணிக்கு எதிராக அறிமுகப்படுத்தப்படுகிறார். அத்துடன் தனது முதலாவது கோலை albacete அணிக்கெதிராக பெற்றார். இது போன வருடம் பார்சிலோனா வீரர் ansu fati இனால் உடைக்கப்படும் முன் வரை இளவயது வீரர் ஒருவரால் அடிக்கப்பட்ட கோலாக காணப்பட்டது. அதே ஆண்டில் பார்சிலோனா அணி 6 வருடங்களுக்கு பிறகு முதல் முறையாக சாம்பியன் பட்டத்தை தட்டிசென்றது.

2005/06 பருவகால போட்டிகளில் மெஸ்ஸி அணியில் நிரந்தர இடத்தை பிடித்து இருந்தார். முன் களவீரர்களான eto , ronaldinho உடன் சேர்த்த மெஸ்ஸியால் சிறந்த முன்கள அணியாக பார்சிலோனா உருவெடுத்தது. தனது முதலாவது ஹாட்ரிக் கோல்களை மிகப்பலம் பொருந்திய அணியான ரியல் மாட்ரிட் அணிக்கு எதிராக பதிவு செய்தார். ஒவ்வொரு பருவகால முடிவிலும் மெஸ்ஸியின் பங்களிப்பு மெருகேறிக்கொண்டே சென்றது.



2007 ம் ஆண்டில் அணியின் நட்ச்சத்திர வீரரான ronaldinho மிலன் அணிக்கு சென்ற பின் பார்சிலோனாவின் புதிய நடச்சத்திர வீரராக மெஸ்ஸி மாறினார். இதற்கு அடையாளமாக அணியின் 10ஆவது இலக்கத்தை மெஸ்ஸிக்கு வழங்கி கௌரவித்தது அணி நிர்வாகம். அந்த சீசனில் சிறப்பாக செயற்ப்பட்ட மெஸ்ஸி அந்த ஆண்டிற்கான ballon d 'or தரப்படுத்தலில் 3 ம் இடத்தை பெற்றார். இருந்த போதிலும் 2007 இன் இறுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சிறப்பாக செயற்பட முடியவில்லை

2008 /09 புதிய ஆண்டில் புதிய முகாமையாளராக pep gurdiala பார்சிலோனா நிர்வாகத்தால் தேர்வு செய்யப்பட்டார். அவரிடம் மெஸ்ஸியை முன்னிலைப்படுத்திய வருங்காலத்துக்கான



# மந்திர மெஸ்ஸி

*தீரன்*

ஒரு சிறந்த அணியை உருவாக்குமாறு கேட்கப்படுகிறது. அதன் விளைவாக மெஸ்ஸிக்கு false nine என்ற புதுவித position வழங்கப்பட்டது. அத்துடன் புது விளையாட்டு அணுகுமுறையான tiki taka அறிமுகப்படுத்தப்படுகிறது. thiery henry, abidel போன்ற வீரர்களின் அறிமுகம் அணியின் தரத்தை மேலும் உயர்த்தியது. இது போன்ற அதிரடி மாற்றம் காரணமாக அந்த ஆண்டின் அனைத்து கோப்பைகளையும் பார்சிலோனா அணி கைப்பற்றி தனது முதலாவது treble ஐ கைப்பற்றியது. அதே ஆண்டில் சிறப்பாக செயற்பட்ட மெஸ்ஸி ballon d 'or விருதை மிக இளவயதில் வென்றார்.

அடுத்தடுத்த சீஸினில் சிறப்பாக செயற்பட்ட மெஸ்ஸி தொடர்ந்து 3 முறை ballon d 'or வென்றார். அத்துடன் pep guradiala அணியில் மையமாக இருந்தார். pep guardiala அணி மூன்று வருடங்களில் 14 கோப்பைகளை வென்றது. இதில் 2 சாம்பியன் லீக்கள், 2 கிளப் வேர்ல்ட் கப் , 2 europe supercup அடங்கும். pep guardiala கீழ் 219 ஆட்டத்தில் 211 கோல் மற்றும் 79 assist கோலை மெஸ்ஸி பெற்று கொடுத்தார். அத்துடன் 2012 மொத்தமாக 91 கோல்களை 69 போட்டிகளில் பெற்று gerad mullarஇனால் ஏற்படுத்தப்பட்ட ஓராண்டில் பெற்ற அதிக கோல் என்ற சாதனையை முறியடித்தார் . pep guardila பார்சிலோனா அணியை விட்டுச்சென்ற பின் பார்சிலோனா அணியின் முகாமையாளராக வந்த tito vilanova மெஸ்ஸியின் வாழ்க்கையில் மிக பெரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்.

*மாற்றங்களோடு வருவார்...*

